
## வேளாண்மை

### தேயிலை

*1986 இல் தேயிலை உற்பத்தி 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 2,113 இலட்சம் கிலோக்கிறும்களாக விளங்கி சிறிதளவு பின்னடைவினைக் கொண்டிருந்தன் மூலம் 1984 தொடக்கம் தேயிலைத்துறையில் அவதானிக்கப்பட்டு வந்த வளர்ச்சிப் போக்கினை மாற்றியமைத்தது. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி உயர் நில, மத்திய நிலப்பிரதேசங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. உயர் நிலத் தேயிலை உற்பத்தி 17 இலட்சம் கிலோக்கிறும்களால் அல்லது 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தவேளையில் மத்திய நிலத்தேயிலை உற்பத்தி 19 இலட்சம் கிலோக்கிறும்களினால் அல்லது 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு மாறாக மொத்தத் தேயிலை உற்பத்தியில் ஆகக்கூடிய பங்கினை வகிக்கும் தாழ்நிலத் தேயிலை உற்பத்தி தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக 8 இலட்சம் கிலோக்கிறும்களினால் சிறிதளவு உயர்வடைந்தது.*

வெளியீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கியமாக . அரசுக்குச் சொந்தமான பெருந் தோட்டங்களில் பிரதிபலிக்கப்பட்டது. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபையினதும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களினதும் இணைந்த வெளியீடு 1986 இல் 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக மொத்தத் தேயிலை உற்பத்தியில் இவற்றின் சார்புரீதியான பங்கு 1985 இன் 70 சதவீதத்திலிருந்து 1986 இல் 68 சத வீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபைகளின் தேயிலை உற்பத்தி 740 இலட்சம் கிலோக்கிறும்களாக அமைந்து 1985 இனைவிட 5 சதவீதம் குறைவாக விளங்கியவேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி 710 இலட்சம் கிலோக்கிறும்களாக அமைந்து 3 சதவீதம் குறைவாக விளங்கியது. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபைகளின் அவற்றுக்குச் சொந்தமான இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட தேயிலை 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 690 இலட்சம் கிலோக் கிறும்களாக விளங்கியவேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களின் தேயிலை 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 580 இலட்சம் கிலோக்கிறும்களாக விளங்கியது. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபையின் மொத்த உற்பத்தியில் ஏறக்குறைய 6 சத வீதத்தினை வகிக்கும் வாங்கப்பட்ட இலையிலிருந்து உற்பத்தியாக்கப்பட்ட தேயிலை 6 இலட்சம் கிலோக்கிறும்களினால் அல்லது 11 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் சார்புரீதியில் கூடிய சதவீதமான ஏறக்குறைய 18 சதவீதப் பங்கினை வகிக்கும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி 9 இலட்சம் கிலோக்கிறும்களினால் அல்லது 7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. தனியார்துறைப் பெருந்தோட்டங்களில் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை 2 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது. இது சிறு உடமையாளர்களை அதிகம் கொண்ட தாழ்நிலப் பிரதேசங்களிலிருந்து அதிகரித்த அளவில் கொழுந்துத் தேயிலை வாங்கப்பட்டமையினால் ஏற்பட்டதாகும். மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபையினதும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினதும் வாங்கப்பட்ட இலைத்தேயிலையின் தயாரிப்பு தனியார்துறையின் உற்பத்தியின்கீழ் உள்ளடக்கப்படின் மொத்தத் தேயிலை உற்பத்தியில் தனியார்துறையின் பங்கு 1986 இல் 38 சதவீதத்திலிருந்து 1985 இல் 39 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

## முதன்மை வேளாண்மைப் பயிர்களின் உற்பத்தி




இலங்கை மத்திய வங்கி

1985 ஆம் ஆண்டின் பெரும்பகுதியிலும் 1986 ஆம் ஆண்டிலும் நிலவிய குறைவான விலைகள் வளமாக்கிப்பயன்பாடு உள்ளடங்கலான வேளாண்மை முறைகளில் பாதிப்பினை ஏற்படுத்தியது. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபைகளின் குறைவான வெளியீடு பெரும்பாலும் வளமாக்கிப்பயன்பாட்டில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி, குறிப்பாக உயர்நில, மத்தியநிலப் பிரதேசங்களின் பாதகமான காலநிலை நிலைமைகள், விளைச்சல் தரும் நிலப்பரப்பில் ஏற்பட்ட சிறிதளவு வீழ்ச்சி என்பன காரணமாக சராசரி விளைச்சல் குறைவடைந்தமையினால் ஏற்பட்டதாகும். ஒரு நிலக்கூறிற்கான வளமாக்கிப் பாவனை அதிகரித்தமையின் விளைவாக சராசரி விளைச்சல் அதிகரித்தபோதிலும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடு பெரும்பாலும் பாதகமான காலநிலை நிலைமைகள், மீள்நடுகைக்காக மரங்கள் பிடுங்கப்பட்டமை என்பன காரணமாக விளைச்சல் தரும் நிலப்பரப்பு குறைக்கப்பட்டமையினால் வீழ்ச்சியடைந்தது. பெரும்பாலான அரச உடமைப் பெருந்தோட்டங்களில் குறைவான விளைவினைத் தரும் பழைய நாற்றுத்தேயிலைகள் காணப்பட்டமை இக்குறைவான வெளியீட்டிற்குக் காரணமாக இருக்கலாம். தாழ் நிலப் பிரதேசங்களின் வெளியீட்டில் ஏற்பட்ட சிறிதளவு அதிகரிப்பு ஓரளவிற்கு இப் பிரதேசங்களின் தேயிலை உற்பத்தியளவு உயர்வாக இருந்தமையினாலும் தேயிலைக்கொழுந்துகளை ஒழுங்கற்ற முறையில் கொய்தமையினாலும் ஏற்பட்டதாகும். குறிப்பாகச் சிறு உடமையாளர்கள் மந்தமடைந்த விலைகளின் விளைவாகக் குறைவடைந்த வருவாயினை ஈடுசெய்யும் வகையில் விற்பனை அளவினை அதிகரிக்கும்பொருட்டு இத்தகைய நடைமுறையில் ஈடுபட்டனர்.

தேயிலைத்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1985 இல் வழங்கப்பட்ட தொகையினைவிட 21,100 மெற்றிக் தொன்களினால் அல்லது 14 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 1986 மாச்சிலிருந்து விலைகளின் வீழ்ச்சியுடன் வளமாக்கி வழங்கல்களிலும் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டதுடன் ஆண்டுமுடிவின்போது விலை அதிகரிப்புடன் வழங்கல்களிலும் சிறு அதிகரிப்புகாணப்பட்டது.

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபையின் பெருந்தோட்டங்களின் வளமாக்கிப் பாவனை 14 சதவீதத்தினால் 41,483 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தவேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பாவனை 34,379 மெற்றிக் தொன்களிலிருந்து 34,595 மெற்றிக் தொன்களுக்கு சிறிதளவால் அதிகரித்தது. குறைவான விலைகளினால் ஏற்பட்ட நிதிப்பிரச்சனைகள் அரச துறைப் பெருந்தோட்டங்களின் வளமாக்கிப் பயன்பாட்டினை விதந்துரைக்கப்பட்ட ஆகக்குறைந்த அளவிற்கு மட்டுப்படுத்தியது. மீதித்தொகையாக மதிப்பிடப்பட்ட தனியார்துறையின் வளமாக்கிப் பயன்பாடு 1985 இன் ஆரம்பத்திலிருந்து தொடர்ந்து குறைந்து சென்ற விலைகளின் பின்னணியில் கணிசமாக வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தோன்றுகின்றது.

*அட்டவணை 1.10*

## தேயிலைப் புள்ளி விபரங்கள் 1984 — 1986

| விடயம் | அலகு | 1984 | 1985(அ) | 1986(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி ... | ப. இ. கி. கிறும்கள் | 208.0 | 214.1 | 211.3 |
| 1.1. உயர்நிலம் ... | ,, | 79.3 | 78.8 | 77.1 |
| 1.2. மத்திய நிலம் ... | ,, | 54.6 | 55.2 | 55.3 |
| 1.3. தாழ்நிலம் ... | ,, | 74.1 | 80.1 | 80.9 |
| 2. தேயிலை பயிரிடப்பட்ட பரப்பு ... | '000எக்டேயர்கள் | 228 | 231 | 223 |
| 3. வளமாக்கி வழங்கல்கள் ... | '000மெ.தொன்கள் | 137.2 | 140.9 | 128.8 |
| 4. மீளப்பயிரிடல் ... | எக்டேயர்கள் | 1,145 | 1,672 | 1,618 |
| 5. விலைகள் ... | | 46.45 | 35.39 | 30.28 |
| 5.1. கொழும்பு தேறிய ... | ரூபா/கி.கி. | 77.20 | 60.62 | 44.52 |
| 5.2. ஏற்றுமதி க. எ. பெ. ... | ,, | 34.00 | 35.00 | வி.கி. |
| 6. உற்பத்திக்கான செலவு ... | ,, | 204.0 | 198.0 | 207.8 |
| 7. ஏற்றுமதிகள் ... | ப. இ. கி. கி. | 15,764.0 | 12,002.8 | 9,252.8 |
| 8. ஏற்றுமதி வருவாய்கள் ... | (ரூ. ப. இ.) | (605) | (434) | (281) |
| 9. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (இ) ... | (சிஎஉ. ப. இ.) | 7.4 | 5.6 | 4.5 |

மூலங்கள்: இலங்கைத் தேயிலைச்சபை,
தேசிய வளமாக்கிச் செயலகம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) பயிரிடலும் பதனிடலும் மட்டும்.
குறிப்பு: எக்டேயர் ஒன்றுக்கான சராசரி விளைச்சலின் தரவு கிடைக்கவில்லை.

நாடுபூராவுமான எக்டேயர் ஒன்றுக்கான சராசரி விளைச்சல் பற்றிய தகவல் இன்னும் கிடைக்கத்தக்கதாக இல்லை. அரசதுறைப் பெருந்தோட்டங்களினால் வழங்கப்பட்ட தரவுகளின்படி மக்கள் பெருந் தோட்ட அபிவிருத்திச்சபைகளின் எக்டேயர் ஒன்றுக்கான சராசரி விளைச்சல் 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 1,238 கிலோக்கிறும்களாக விளங்கியவேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களின் எக்டேயர் ஒன்றுக்கான விளைச்சல் 4 சதவீதத்தினால் அதிகரித்து 1,170 கிலோக்கிறும்களாக விளங்கியது. இரு கூட்டுத்தாபனங்களினதும் உற்பத்தியளவில் ஏற்பட்ட வேறுபாடுகள் வளமாக்கிப் பயன்பாட்டில் ஏற்பட்ட வேறுபாடுகள் காரணமாக ஏற்பட்டிருக்கலாம்.

முந்திய ஆண்டில் அவதானிக்கப்பட்ட சிறிதளவு அதிகரிப்புக்கு மாறாகத் தேயிலைச் செய்கையின்கீழ் பதிவுசெய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 1986 இல் 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 222,905 எக்டேயர்களாக விளங்கியது. இது பெரும்பாலும் சில எல்லைத் தேயிலைக்காணிகள் உற்பத்தியிலிருந்து விடுபட்டு நில மாற்றல் கொள்கைகளின்கீழ் குடியமர்த்தல் நோக்கங்களுக்காகச் சுத்தப்படுத்தப்படுவதனால் ஏற்பட்டதாகும். இது குறிப்பாக காணிக்கு அதிக தேவையையும், பெருமளவு எல்லைத்தேயிலை நிலங்களையும் கொண்ட மத்திய நாட்டுப் பிரதேசங்களைப் பொறுத்தவரை உண்மையாக விளங்கியது. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தின்கீழ் தேயிலை பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 53,082 எக்டேயர்களாக விளங்கியவேளையில் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபையின் அளவு 59,689 எக்டேயர்களுக்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. இது பெரும்பாலும் சில பெருந்தோட்டங்களை முந்திய உடமையாளர்களுக்கு கையளித்தமையினாலும் சிறி

தளவுக்கு சில காணிகள் குடியமர்த்தல் நோக்கங்களுக்காக மாற்றல் செய்யப்பட்டமையினுலும் ஏற்பட்டதாகும். விளைச்சல்தரும் நிலப்பரப்பும் வீழ்ச்சியடைந்ததுடன் இவ் வீழ்ச்சிமக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபைகளைப் பொறுத்தவரை மிகவும் சிறிதளவாக இருந்தவேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களைப் பொறுத்தவரை ஏறக்குறைய 5 சதவீதமாக விளங்கியது. விளைச்சல்தரும் நிலப்பரப்பு இரு கூட்டுத்தாபனங்களினதும் மொத்தத் தேயிலை நிலப்பரப்பில் ஏறக்குறைய 94 சதவீதத்தினை வகித்தது.

1986 இல் மீள்நடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பு 1985 இன் 1,672 எக்டேயர்களிலிருந்து 1986 இல் 1,618 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபையின் மீள்நடுகை ஏறக்குறைய 11 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்து 553 எக்டேயர்களாக விளங்கிய வேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களின் மீள்நடுகை 6 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்து 602 எக்டேயர்களாக விளங்கியது. தனியார்துறைப் பெருந்தோட்டங்களின் மீள்நடுகை 12 சதவீதத்தினுல் 463 எக்டேயர்களுக்கு அதிகரித்தது. நடுத்தர முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீள்நடுகையில் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் தொடர்பாக நோக்குகையில் அரசதுறைப் பெருந்தோட்டங்களின் செயலாற்றம் எதிர்பார்த்தனைவிடக் குறைவாக இருந்தது. இது குறிப்பாக 1986 இல் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஏறக்குறைய 1,000 எக்டேயர்களில் மீள்நடுகை செய்யவேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினைப் பொறுத்தவரை உண்மையாகக் காணப்பட்டது. இக்குறைவான செயலாற்றம் பெரும்பாலும் இந்நிறுவனங்கள் குறைவான விலைகள் காரணமாக நிதிக்கட்டுப்பாடுகளை எதிர்நோக்கியமையினுலும் இதன் விளைவாக நிகழ்ச்சித்திட்டத்திற்கான அவற்றின் கட்டுப்பாடுகளை நிறைவேற்ற முடியாமையினுலும் ஏற்பட்டதாகும். மீள்நடுகை உதவுதொகையின் நிருவாகம் தேயிலைச் சிறு உடமையாளர் அபிவிருத்தி மேலாண்மைச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டதனைத் தொடர்ந்து தனியார்துறையின் தேயிலை மீள்நடுகையில் சிறு முன்னேற்றம் காணப்பட்டது. எனினும் 1986 முடிவில் உள்ளவாறுன மீள்நடுகை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பின் அளவு இத்துறையில் தேயிலை பயிரிடப்பட்டதாகப் பதிவுசெய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பில் 21 சதவீதமாக மட்டும் விளங்கியது. எதிர்பார்த்ததனைவிட மெதுவான முன்னேற்றத்திற்கு முதிர்ச்சியடைந்த பெருந் தோட்டங்களே காரணம் என்பதனுல் இது கவனத்தில் எடுக்கப்படவேண்டிய ஒரு விடயமாகும்.

கடந்த அண்மை ஆண்டுகளில் சார்புரீதியில் குறைந்த முக்கியத்துவத்தினைப் பெற்றிருந்த புதிய பயிரிடல் 1985 இன் 789 எக்டேயர்களிலிருந்து 1986 இல் 1,612 எக்டேயர்களுக்கு அதிகரித்தது. இம்முன்னேற்றமானது தனியே தனியார் துறையின் புதிய பயிரிடல்களில் ஏற்பட்ட இரு மடங்கிற்கு மேலான அதிகரிப்புக் காரணமாக ஏற்பட்டதாகும். இது சிறு உடமையாளர்களை அதிகமாகக் கொண்டிருந்த தாழ்நிலப் பிரதேசங்களில் அதிகம் செறிவாகப் காணப்பட்டது. ஏனைய துறைகளுடன் ஒப்பிடுகையில் இங்கு பயிர்ச்செய்கைக்குக் கீழான நிலப்பரப்பினை அதிகரிப்பதற்குக் கூடிய வாய்ப்புண்டு. அரசதுறையிலான புதிய பயிரிடல் தொடர்ந்தும் சிறு அளவினதாகவே இருந்தது. இலங்கை அரச பெருந் தோட்டத்தின் புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 1985 இன் 144 எக்டேயர்களிலிருந்து 1986 இல் 110 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தவேளையில் மக்கள் பெருந் தோட்ட அபிவிருத்திச்சபைகளின் நிலப்பரப்பு 46 எக்டேயர்களிலிருந்து 94 எக்டேயர்களுக்கு அதிகரித்தது. மீளப்பயிரிடல், புதிய பயிரிடல் என்பனவற்

றுக்கான உதவுதொகை வீதங்கள் இவ்வாண்டில் மாற்றமின்றி இருந்ததுடன் அரச உடமைப் பெருந்தோட்டங்களுக்கான நடுத்தர முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் புகுத்தப்பட்டதுடன் 1984 இலிருந்து தனியார்துறை மட்டுமே இவ்வுதவுதொகையைப் பெற உரித்துடையதாக விளங்கியது.

அரசதுறைப் பெருந்தோட்டங்களில் தேயிலை உற்பத்தியின் கணிக்கப்பட்ட சராசரிச் செலவு கிலோக்கிரும் ஒன்றுக்கு ரூ. 36.53 ஆக மதிப்பிடப்பட்டு சென்ற ஆண்டினைவிட 3 சதவீதம் குறைவாக விளங்கியது. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபைகளின் செலவு கிலோக்கிரும் ஒன்றுக்கு ரூ. 37.71 ஆக 3 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்த வேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் செலவு கிலோக்கிரும் ஒன்றுக்கு ரூ. 35.34 ஆக 3 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. முக்கிய கூறினை வகிக்கும் கூலிச் செலவுகள் 1984 இல் அவை கடைசியாக கணிசமான அளவு மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர் மாற்றமின்றிப் பெரும்பாலும் அதே அளவினதாக விளங்கியது. குறைவடையும் விலைகள் காரணமாக செலவினைக் குறைக்கும் வழிமுறைகளை மேற்கொள்வதற்கு இக் கூட்டுத்தாபனங்கள் நிர்ப்பந்திக்கப்பட்ட உண்மையைக் கருத்தில் கொள்ளின் செலவுகளில் மிதமான ஒரு குறைப்பு எதிர்பார்க்கப்பட்டது.

தேயிலையின் சராசரி ஏற்றுமதி (க.ஏ.பெ.) விலை 1986 இல் 27 சதவீதத்தினுல் ரூ. 44.52 இற்கு வீழ்ச்சியடைந்தது. இதுவே 1982 இலிருந்து பதிவுசெய்யப்பட்டதில் ஆகக்குறைந்ததாகும். கொழும்பு ஏலத்திலான சராசரி தேயிலை விற்பனைவிலை கிலோக்கிரும் ஒன்றுக்கு 1986 இல் 14 சதவீதத்தினுல் ரூ. 30.28 இற்கு வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் உற்பத்தியாளர் இலாபங்களின் எதிர்க்கணிய அளவு 1985 இன் கிலோக்கிரும் ஒன்றுக்கான ரூ. 6.64 இலிருந்து 1986 இல் கிலோக்கிரும் ஒன்றுக்கு ரூ. 7.58 இற்கு அதிகரித்தவேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களின் இலாபங்கள் 1985 இன் கிலோக்கிரும் ஒன்றுக்கான ரூ. 2.97 இலிருந்து 1986 இல் கிலோக்கிரும் ஒன்றுக்கு ரூ. 3.48 ஆக அதிகரித்தன.

1985 இன் ஆரம்பத்திலிருந்து உறுதியாக வீழ்ச்சியடைந்து சென்ற தேயிலை விலைகள் 1986 இல் தொடர்ந்தும் ஆனுல் குறைவான வேகத்தில் வீழ்ச்சியடைந்தன. 1986 இன் மூன்றும் காலாண்டு முடிவுவரையிலும் தொடர்ந்து காணப்பட்ட இவ்வீழ்ச்சி அதன் பின்னர் மாறுபட்டமைந்தது.

தேயிலை சிறு உடமையாளர் அபிவிருத்தி மேலாண்மைச்சபை தொடர்ந்தும் தனியார்துறையின் தேயிலை பயிரிடுவோருக்குச் சிறப்பாகத் தேயிலை சிறு உடமையாளரின் விடயங்களில் கவனம் செலுத்தி அவர்களது தேவைகளை ஈடு செய்தது. 1985 இலிருந்து தேயிலை நடுகை உதவுதொகைகளின் தொழிற்பாடு தனியார்துறையின் நிருவாகத்திற்குட்பட்டதன் பின்னர் தேயிலை சிறு உடமையாளர் அபிவிருத்தி மேலாண்மைச்சபை மீளப் பயிரிடல், புதியபயிரிடல் வீதங்களை அதிகரித்தது. 1986 இல் இது 463 எக்டேயர்களில் மீளப்பயிரிடுவதற்கு உதவுதொகை வழங்கியது. இது 1985 இல் மீளப்பயிரிடப்பட்ட நிலப்பரப்பினைவிட 12 சதவீதம் கூடுதலானதாகும். புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 1985 இன் 599 எக்டேயர்களிலிருந்து 1986 இல் 1,408 எக்டேயர்களுக்கு இருமடங்கிற்கும் மேலாக அதிகரித்தது. 1986 இல் தேயிலை சிறு உடமை அபிவிருத்தி மேலாண்மைச்சபை மீள்நடுகைச் செலவினை தாழ்நிலப் பிரதேசத்தில் எக்டேயர் ஒன்றுக்கு ரூ. 135,534 ஆகவும், மத்திய, உயர் பிரதேசங்களில் எக்டேயர்

ஒன்றுக்கு ரூ. 184,867 ஆகவும் மதிப்பிட்டது. இது தற்போதைய மீள்நடுகை உதவுதொகையின் வீதத்தினைவிட இரு மடங்கிற்கும் கூடுதலானதாகும். தேயிலைச்சிறு உடமை அபிவிருத்தி மேலாண்மைச்சபை 19 வழங்கல் நிலையங்க ளினூடாக 2,257 மெற்றிக் தொன் வளமாக்கியையும் வழங்கியது. இது 1985 இல் செய்யப்பட்ட வழங்கல்களைவிடச் சிறிதளவு அதிகமானதாகும். காலி மாவட்டத்தில் மூன்று புதிய நாற்றுமேடைகள் திறக்கப்பட்டதுடன் பயிர்நாற்று மேடைகளின் எண்ணிக்கை ஒன்பதாக அதிகரித்தது. சிறு உடமையாளர்களின் தேயிலைக்கொழுந்துகளைப் பதனிடுவதற்காகத் தேயிலைச்சிறு உடமையாளர் அபி விருத்தி மேலாண்மைச்சபையினால் தொழிற்படுத்தப்பட்ட தேயிலைத்தொழிற்சாலை களின் எண்ணிக்கை மாற்றமின்றிப் பன்னிரண்டாக விளங்கியது.

குறைவான விலைகளினால் பாதிக்கப்பட்ட தேயிலைச்சிறு உடமையாளர்க ளுக்கு உதவும் நோக்குடன் 1986 யூன் - ஒத்தோபர் காலப்பகுதியில் தேயிலை சமநிலைப்படுத்தும் நிதியத்திலிருந்து நிதியிடப்படும் உதவித்திட்டமொன்று இலங் கைத் தேயிலைச்சபையினால் தொழிற் படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் தமது தேயிலைக்குக் கொழும்பு ஏலங்களில் கிலோக்கிரும் ஒன்றுக்கு ரூ. 22 இற்கும் ரூ. 34 இற்கும் இடையிலான மாதாந்தச் சராசரி விலையைப் பெறும் சிறு உடமை யாளர்களுக்கு தயாரிக்கப்பட்ட ஒரு கிலோக்கிரும் பச்சைத் தேயிலைக்கு 25 சதம் (அல்லது கிலோகிரும் தேயிலைக்கு ரூ. 1.51) செலுத்தப்பட்டது.

இலங்கையின் தேயிலைக் கைத்தொழிலின் பன்னாட்டு போட்டித்தன்மை யினைப் பேணுவதில் சிறப்பாகக் குடிவகைகளுக்கான உயர்ந்த உலகச் சந்தைப் போட்டி அதி உயர்ந்த தேசிய முதன்மைத்துவத்தினைப் பெறுகின்ற விடயமாக வுள்ளது. இவ்வாண்டின் போதான பலமான விலைத்தாக்கங்களின் மத்தியில் இலங்கை 1986 இல் செலவினைக்குறைக்கக்கூடியதாக இருந்தமை மிகவும் ஊக்க மளிக்கும் ஒரு விடயமாகும். மேலும் சிக்கனங்கள் கண்டுபிடிக்கப்படவேண்டியது டன் அரச பெருந்தோட்டங்களைப் பொறுத்தவரை இந்நிறுவனங்களின் உற் பத்திச் செலவுகளில் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கும் பொதுவான செலவு களில் குறைவினையும் ஏற்படுத்தமுடியும்.

பொதுவான ஆராய்ச்சிகள் போன்றவற்றில் ஏற்பட்ட தரமான முன்னேற் றங்களின் மூலம் தேயிலைப் பயிர்ச்செய்கைப் பிரதேசங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடையப்பட்டுள்ளவேளையில் தேயிலைத் தயாரிப்பும் சந்தைப்படுத் தலும் இன்னும் திருந்திய புதிய அணுகு முறைகளை வேண்டிநிற்கும் விடயங்க ளாக உள்ளன. மரபுரீதியான தேயிலை என அழைக்கப்பட்ட தேயிலையிலிருந்தும் பெயர்ந்து நவீன முறைத் தேயிலையை நோக்கி கேள்வி பெயர்கின்றமை கவனிக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, 1986 இன் தேயிலை உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில் வெட்டி, கிழிக்கப்பட்டு சுருட்டப்பட்ட தேயிலையினதும் லோபறி பதனிடல் தேயிலையினதும் வெளியீடு மிகக்கூடியளவில் அதிகரித்தமையாகும். இத்தேயிலைகளின் உற்பத்தி 1985 இன் 35 இலட்சம் கிலோக்கிரும்களிலிருந்து 1986 இல் 52 இலட்சம் கிலோக்கிரும்களுக்கு உயர் வடைந்தது. இங்கு சந்தையில் கூடிய கேள்வியினைக்கொண்ட தேயிலைகளின் உற் பத்தியில் கூடிய நெகிழ்ச்சித்தன்மை காணப்படுவதனைக் கவனிக்கவேண்டியது பயனுடையதாகும்.

## இறப்பர்

1986 இல் இறப்பர் உற்பத்தி 1,385 இலட்சம் கிலோக்கிரும்களாகத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டு முந்திய ஆண்டின் உற்பத்தியினைவிட 10 இலட்சம் கிலோகிரும்கள் அல்லது 1 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பைக்காட்டியது. 1985 இல் காணப்பட்ட வீழ்ச்சியடைந்துசெல்லும் போக்கிற்கு மாறாக, மொத்த அரசதுறை இறப்பர் உற்பத்தியில் ஏறக்குறைய 55 சதவீதத்தினைக்கொண்டிருந்த அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களுக்குச் சொந்தமான பெருந்தோட்டங்கள் வெளியீட்டின் அதிகரிப்பு முழுவதனையும் வழங்கின. மொத்த அரசதுறை இறப்பர் வெளியீட்டில் மீதியான 45 சதவீதத்திற்கு வகைகூறும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைகளினால் நிருவகிக்கப்படும் பெருந் தோட்டங்களின் இறப்பர் உற்பத்தி 1.4 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. அரசிற்குச் சொந்தமான இரு நிறுவனங்களினதும் முரண்பாடான செயலாற்றம் பெரும்பாலும் இவ்விரு நிறுவனங்களும் அமைந்துள்ள இடங்களில் உள்ள இறப்பர் பெருந்தோட்டப்பிரதேசங்களின் வேளாண்மைக் காலநிலை நிலைமைகளில் உள்ள வேறுபாடு காரணமாக ஏற்பட்டதாகும். சிறு உடமைகள் உள்ளடங்கலாக தனியார் துறைப் பெருந்தோட்டங்களின் இறப்பர் உற்பத்தி முந்திய ஆண்டினைப்போன்று மாற்றமின்றிப் பெரும்பாலும் அதே மட்டத்திலேயே விளங்கியது.

1986 இன் சராசரி விளைச்சல் எக்டேயர் ஒன்றுக்கு 830 கிலோக்கிரும்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது முந்திய ஆண்டினைவிட சிறிதளவு முன்னேற்றமானதாகும். பால் எடுத்தலின் கீழான நிலப்பரப்பு சிறிதளவு வீழ்ச்சியடைந்த போதிலும் விளைச்சலில் ஏற்பட்ட முன்னேற்றம் தனியார் துறையின் வெளியீட்டினை முந்திய ஆண்டின் மட்டத்தில் பேணுவதற்கு உதவியது. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் நிருவகிக்கப்பட்ட பெருந்தோட்டங்களின் சராசரி விளைச்சல் 6 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபைகளின் விளைச்சல் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

முந்திய ஆண்டில் அவதானிக்கப்பட்ட போக்கினைத்தொடர்ந்து பயிர்ச்செய்கையின் கீழ்ப்பதிவு செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பும் பால் எடுத்தலின் கீழான நிலப்பரப்பும் 1986 இல் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன. பயிர்ச்செய்கையின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பு வீழ்ச்சியடைந்தமை முக்கியமாக குறிப்பிட்ட சில இறப்பர் எல்லை நிலங்களில் தேயிலை பயிரிடப்பட்டமையினாலும், பால் எடுக்கும் நிலங்கள் வீழ்ச்சியடைந்தமை ஓரளவிற்கு மீள்நடுகை அதிகரித்தமையால் பால் எடுத்தலின் கீழான பரப்பளவுகளை குறைத்தமையினாலும் ஏற்பட்டதாகும்.

கடந்த சில ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட போக்கினைத் தொடர்ந்து இறப்பர்த் துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1986 இல் 2,100 மெற்றிக் தொன்களினால் அல்லது 9 சதவீதத்தினால் 26,300 மெற்றிக் தொன்களுக்கு கணிசமாக அதிகரித்தது. எனினும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களும், மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைகளும் முந்திய ஆண்டினைப் போன்று வளமாக்கிப் பயன்பாட்டில் வீழ்ச்சியைப் பதிவு செய்தன. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையினால் பயன்படுத்தப்பட்ட வளமாக்கியின் அளவு முந்திய ஆண்டினைவிட 605 மெற்றிக் தொன்களினால் அல்லது 16 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தவேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பயன்பாடு 1,096 மெற்றிக் தொன்களினால் அல்லது 14

சதவீதத்தினல் அதிகரித்தது. இவ்விரு கூட்டுத்தாபனங்களினுலும் எதிர்நோக்கப் பட்ட நிதிப்பிரச்சனைகளே வளமாக்கியின் குறைவான பாவனைக்கு முக்கிய காரணி யாக அமைந்தது. எனவே அதிகரித்த வேளாண்மைப் பயன்பாடு பெரும்பாலும் முற்றுகத் தனியார்துறைப் பெருந்தோட்டங்களுக்கே மட்டுப்படுத்தப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. இது மீண்டும் இறப்பர் உதவுதொகை நிகழ்ச்சித்திட்டத் தினுல் ஊக்குவிக்கப்பட்ட முதிர்ச்சியடையாத செடிகளுக்கான வளமாக்கிப் பயன்பாட்டினைப் பெருமளவிற்குப் பிரதிபலிக்கின்றது.

அட்டவணை 1.11

**இறப்பர் புள்ளி விபரங்கள் 1984–1986**

| விடயம் | | கூறு | 1984 | 1985(அ) | 1986(ஆ) |
|---|---|---|---|---|---|
| 1. உற்பத்தி | ... | ப. இ. கி. கி. | 142.0 | 137.5 | 138.5 |
| 2. பரப்பளவு | | | | | |
| 2.1. பயிர்ச் செய்கைக்குட்பட்ட | ... | '000 எக்டேயர்கள் | 205.6 | 205.5 | 205.2 |
| 2.2. பால் எடுக்கும் | ... | ,, | 169.0 | 168.2 | 166.7 |
| 3. விளைச்சல் | ... | கி. கி. /எக்டேயர் | 840 | 818 | 830 |
| 4. வளமாக்கி வழங்கல்கள் | ... | '000மெ. தொன்கள் | 23.5 | 24.2 | 26.3 |
| 5. மீள்நடுகை | ... | எக்டேயர்கள் | 5,530 | 6,694 | 5,911 |
| 6. விலைகள் | ... | | | | |
| 6.1. ஏற்றுமதிகள் க. ஏ. பெ. | ... | ரூ. / கி. கி | 26.16 | 21.34 | 23.83 |
| 6.2. கொழும்பு ஆர். எஸ். எஸ். 1 | ... | ,, | 14.40 | 15.90 | 16.62 |
| 7. உற்பத்திச் செலவு (இ) | ... | ,, | 12.06 | 13.67 | 13.70 |
| 8. ஏற்றுமதிகள் | ... | ப. இ. கி. கி. | 126.2 | 120.2 | 115.0 |
| 9. உள்நாட்டு நுகர்வு | ... | ,, | 15.1 | 15.2 | 16.0 |
| 10. ஏற்றுமதி வருவாய்கள் | ... | ரூ. ப. இ. | 3,301.0 | 2,566.0 | 2,622.0 |
| | | (சிஎஉ. ப. இ.) | (127) | (93) | (80) |
| 11. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (ஈ) | .. | | 1.6 | 1.4 | 1.4 |

மூலங்கள்: இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களம்.
தேசிய வளமாக்கிச் செயலகம்.
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டது.

(ஆ) தற்காலிகமானவை.

(இ) அரசதுறைத் தோட்டங்கள், தனியார்துறைத் தோட்டங்கள், சிறு உடைமையாளர்கள் ஆகியவற்றின் உற் பத்திச் செலவின் நிறைவேற்றப்பட்ட சராசரி.

(ஈ) பயிர் வளர்த்தலிலும், பதனிடலிலும் மட்டும்.

தற்காலிகத் தரவுகளின்படி 1986 இல் மீள்நடுகை செய்யப்பட்ட நிலப் பரப்பு 5,911 எக்டேயர்களாக அமைந்து முந்திய ஆண்டில் மீள்நடுகை செய்யப் பட்ட நிலப்பரப்பினைவிட 12 சதவீதம் குறைவாக விளங்கியது. மக்கள் பெருந் தோட்ட அபிவிருத்திச்சபையினுல் முகாமைப்படுத்தப்பட்ட பெருந்தோட்டங் களின் மீள்நடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பு 1985 இல் 849 எக்டேயர்களி லிருந்து 1986 இல் 863 எக்டேயர்களுக்குச் சிறிதளவால் அதிகரித்த வேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினுல் முகாமைப்படுத்தப்பட்ட பெருந் தோட்டங்களின் நிலப்பரப்பு 991 எக்டேயர்களிலிருந்து 1,101 எக்டேயர்களுக்கு 11 சதவீதத்தினுல் அதிகரித்தது.

மீள்நடுகையில் ஏற்பட்ட பொதுவான வீழ்ச்சி ஒரளவிற்கு ஆண்டு முழுவதும் நிலவிய சார்புரீதியில் கவர்ச்சிகரமாக அமைந்த விலைகள் பெரும்பாலான சிறு உடமையாளர்களை மீள் நடுகையினைக் காலம் தாழ்த்தச் செய்தமையினால் ஏற்பட்டதாகும். 1983 இல் நிலவிய கடுமையான வரட்சி காரணமாக 1984 இல் விதைகளுக்குத் தட்டுப்பாடு எற்பட்டமையினால் போதுமான அளவு தொகையில் செடிகள் கிடைக்கப்பெறாமையும் 1986 இல் மீள்நடுகை வீழ்ச்சியடைந்தமைக்குக் காரணமாயிற்று. இவ்வாண்டில் முக்கிய இறப்பர் வளரும் மாவட்டங்களான களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் உலக வங்கியின் கீழான சிறுஉடமையாளர் இறப்பர் மீள்நன்னிலைப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் 2,915 எக்டேயர்கள் மீள்நடுகை செய்யப்பட்டு 1986 முடிவில் இச்செயற்றிட்டத்தின் கீழ் மீள்நடுகை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பினை 17,175 எக்டேயர்களுக்குக் கொண்டுவந்தது.

முந்திய ஆண்டில் கணிசமாக விரிவடைந்த இறப்பரின் புதிய பயிரிடல் 1986 இல் பின்னடைவினைக் கொண்டிருந்தது. புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 1985 இன் 2,529 எக்டேயர்களிலிருந்து 1986 இல் 1,706 எக்டேயர்களுக்கு 33 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சி அரச தனியார்துறைப் பெருந்தோட்டங்கள் இரண்டிலும் பிரதிபலிக்கப்பட்டது. புதிய பயிரிடலில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கியமாக இவ்வாண்டில் முக்கிய இறப்பர் விளைவுப் பிரதேசங்களில் பெரும்பாலனவற்றில் நிலவிய வரண்ட காலநிலை நிலைமைகள் காரணமாக ஏற்பட்டதாகும். இறப்பர் பயிர்ச்செய்கையை மேலும் விரிவுபடுத்துவதற்குப் பொருத்தமான நிலம் கிடைக்கப்பெறாமையும் புதிய பயிரிடலில் ஏற்பட்ட மந்தத்திற்குக் காரணமாகும்.

இறப்பரின் உற்பத்திச்செலவு 1986 இல் சிறிதளவு அதிகரித்தது. முந்திய ஆண்டினைப் போன்று தனியார்துறைப் பெருந்தோட்டச் சொந்தக்காரரும் சிறு உடமையாளர்களும் தொழிலாளர் செலவுகளை கட்டுப்படுத்துவதன்மூலம் செலவின் அதிகரிப்புக்களைக் கட்டுப்படுத்தக்கூடியவர்களாகவிருந்தனர். கடந்த ஆண்டுகளில் அதிகரித்த செலவுகளைக்கொண்டிருந்த அரசதுறைப் பெருந்தோட்டங்கள் 1986 இல் வேறுபட்ட நிலையை எதிர்நோக்கின. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபைகளின் செலவுகள் 1985 இல் கிலோக்கிராம் ஒன்றுக்கு ரூ. 17.75 இலிருந்து 1986 இல் கிலோக்கிராம் ஒன்றுக்கு ரூ. 17.62 ஆக வீழ்ச்சியடைந்த வேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் செலவுகள் 1985 இன் கிலோக்கிராம் ஒன்றுக்கு ரூ. 16.79 இலிருந்து 1986 இல் கிலோக்கிராம் ஒன்றுக்கு ரூ. 17.22 இற்கு 3 சதவீதத்தினால் மிதமாக அதிகரித்தன. இக்கூட்டுத்தாபனங்களினால் மேற்கொள்ளப்பட்ட வளமாக்கியின் கட்டுப்பாடான பயன்பாடு, மாற்றமற்ற தொழிலாளர் கூலிகள் போன்ற செலவினைக் குறைக்கும் வழிமுறைகள் அவற்றின் செலவுகளை மிகவும் நிலையாக வைத்திருப்பதற்கு உதவின. பெரும்பாலும் விலைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபையின் உற்பத்தியாளர் இலாபங்கள் 1985 இல் கிலோக்கிராம் ஒன்றுக்கான ரூ. 1.44 கொண்ட நட்டங்களிலிருந்து 1986 இல் கிலோக்கிராம் ஒன்றுக்கு ரூ. 3.75 கொண்ட நேர்க்கணிய இலாபமாக முன்னேறிய வேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியாளர் இலாபங்கள் 1985 இல் கிலோக்கிராம் ஒன்றுக்கு ரூ. 0.60 கொண்ட நேர்க்கணிய இலாபத்திலிருந்து 1986 இல் கிலோக்கிராம் ஒன்றுக்கு ரூ. 4.19 ஆக அதிகரித்தது.

இறப்பரின் சராசரி (கஏபெ) விலை 1985 இல் காணப்பட்ட 18 சதவீத வீழ்ச்சிக்கு மாறுக 1986 இல் கிலோக்கிறும் ஒன்றுக்கு ரூ. 23.83 ஆக 12 சத வீதத்தினுல் அதிகரித்தது. ஆர்.எஸ்.எஸ். 1 இன் கொழும்புச் சந்தைவிலை 1986 இல் 5 சதவீதத்தினுல் அதிகரித்தது. ஆர்.எஸ்.எஸ். 1 இற்கும் ஆர்.எஸ்.எஸ். II இற்கும் இடையிலான விலை வேறுபாடு தொடர்ந்தும் சிறிதளவாக விளங்கியது. சோல், லேற்றெக்ஸ் இறப்பர் இரண்டினதும் சராசரி விலை ஒவ்வொன்றும் இவ் வகைகளுக்கான அதிகரித்த கேள்வி காரணமாக 35 சதவீதத்திற்கும் கூடுதலாக அதிகரித்தன. முக்கிய இறப்பர் உற்பத்தி நாடுகளிற் காணப்பட்ட ஓரளவு உற் பத்தித் தேக்க நிலை காரணமாக கைத்தொழில் நாடுகளிலிருந்து ஏற்பட்ட அதி கரித்த கேள்வியின் காரணமாக விலையில் சிறந்த செயலாற்றம் காணப்பட்டிருக் கலாம்.

இறப்பரின் உள்நாட்டு நுகர்வு முந்திய ஆண்டினைப்போன்று மொத்த உற்பத்தியில் ஏறக்குறைய 12 சதவீதமாக விளங்கியது. ஒரு புறத்தில், இறப்பருக் கான குறைந்தளவு உள்நாட்டுக் கேள்வி காணப்படும் வேளையில் மறுபுறத்தில் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களின் விரிவாக்கத்திற்கு உள்ளார்ந்த வளம் காணப்படுகின்றமை இத்துறையின் விரிவாக்கத்தினை தடை செய்கின்ற சில கடுமையான தடைகளை எடுத்துக்காட்டுகின்றது. எனவே முதன் மைவாய்ந்த இத்துறையின் வளர்ச்சியைத் தடைசெய்கின்ற காரணிகளை இனங் காண்பதற்கு அனைத்தையும் உள்ளடக்கிய ஆய்வொன்றை இத்துறையில் மேற் கொள்வது அவசிய தேவையாகவுள்ளது. உற்பத்தியாளர்களும் அதேபோன்று தயாரிப்பாளர்களும் அத்தகைய நடவடிக்கைகளிலிருந்தும் கிடைக்கும் நன்மை களைப் பெறக் கூடியதாக இருக்கும்.

முன்னைய ஆண்டில் அதிகமானளவில் அதிகரிக்கப்பட்ட பலவகை பெருந் தோட்ட உதவுதொகைகள் இவ்வாண்டில் மாற்றமின்றியிருந்தன. இறப்பர் மீள பயிரிடுதலில் 1985 இல் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தின் பின்பு 1986 இல் பின்னடைவு காணப்பட்டமை ஓரளவுக்கு கவனிக்கப்படவேண்டிய விடய மாகும். உலகவங்கியால் உதவியளிக்கப்பட்ட சிறு உடமையாளர்கள் இறப்பர் மீள்நன்னிலைப்படுத்தற் செயற்றிட்டங்கள் முடிவடையும் நிலையை அடையும்போது சிறு உடமையாளர் துறையில் மீள் பயிரிடல் வீதம் இந்நோக்கத்திற்காக குறை வான நிதியமே கிடைக்கத்தக்கதாக இருப்பதால் பெரும்பாலும் வீழ்ச்சியடையும் சாத்தியமுள்ளது. இதனுல் இலாபம் மிக்க இறப்பர் மரங்களின் புதுப்பித்தலை 30 ஆண்டு உற்பத்திவட்டம் அல்லது அதற்கு மேலாக உறுதிப்படுத்தும் மட்டத் தில் மீள்பயிரிடல் வீதத்தினை பேணுவதற்கு ஒருமித்த முயற்சியொன்று தேவைப்படு கின்றது.

### தெங்கு

தெங்கு உற்பத்தியில் 1985 இல் அவதானித்த குறிப்பிடத்தக்க அதிகரிப்பு 1986 இலும் தொடர்ந்து விளங்கியது. 1986 இன் மதிப்பிடப்பட்ட உற்பத்தி யான 30,410 இலட்சம் காய்களே இதுவரை பதியப்பட்ட அதியுயர் மட்டமாக விளங்கியதுடன் இது முன்னைய ஆண்டினைவிட 3 சதவீதம் உயர்வானதாகும். சாதகமான காலநிலையும் தெங்குச்சந்தையின் தாராளமயப்படுத்தலைத் தொடர்ந்து ஏற்பட்ட வலுவான விலை ஊக்குவிப்புக்களும் வெளியீடுகளின் தொடர்ச்சியான அதிகரிப்புக்கு பெருமளவிற்குக் காரணமாகும். எனினும் வளமாக்கிப் பயன்பாடு 1984 ஐவிட 1985 இல் வீழ்ச்சியுற்றுலும் கூட 1984 இற்கு முன்னைய மூன்று

ஆண்டு காலத்துடன் ஒப்பிடும்போது இது ஒப்பீட்டில் உயர்வான மட்டத்தில் விளங்கியது. 1985 இல் ஒப்பீட்டு ரீதியில் உயர் மட்ட வளமாக்கிப் பயன்பாடு 1986 இன் உற்பத்தியினையும் ஊக்குவித்திருக்கலாம். ஆண்டின் முதலரைப் பகுதியில் உற்பத்தி அதியுயர் மட்டத்தினை அடைந்து 1985 இன் இதே காலப்பகுதியைவிட ஏறத்தாழ 24 சதவீதம் உயர்வானதாக விளங்கியவேளையில் ஆண்டின் இரண்டாம் அரையாண்டின் உற்பத்தி 1985 இன் இரண்டாம் அரையாண்டுடன் ஒப்பிடுகையில் 14 சதவீதம் குறைவானதாக விளங்கியது.

உயர்மட்ட உற்பத்தி உள்நாட்டு விலைகளை குறைவடையச் செய்தாலும் பதனிடலுக்காக காய்களின் கூடியளவு நிரம்பலை உறுதிப்படுத்தியது. தேங்காயெண்ணெய் உற்பத்தி 10 சதவீதத்தால் உயர்வடைந்தவேளையில் தேங்காய்த் துருவலின் வெளியீடும் உலர்த்திய தேங்காய்களின் ஏற்றுமதிகளும் முறையே 18 சதவீதத்தினாலும், 30 சதவீதத்தினாலும் அதிகரித்தன. உடன்காய்களின் ஏற்றுமதிகளும் 80 இலட்சம் காய்களால் அல்லது 80 சதவீதத்தினால் அதிகரித்தன.

பன்னாட்டுச் சந்தைகளின் விலைகள் முன்னைய ஆண்டின் குறைவான விலைகளை விட அதிகளவுக்கு குறைவாகக் காணப்பட்டபோதும் பதனிடலுக்காக காய்கள் பெருமளவுக்கு கிடைத்தமை, ஏற்றுமதி விதி முறைகளின் தாராளமாக்கல், குறைவான ஏற்றுமதித் தீர்வைகள், தெங்கு உற்பத்திகள் மீதான ஏற்றுமதித் தீர்வைகள் இடைநிறுத்தப்பட்டமை போன்ற காரணிகளின் இணைந்த விளைவினால் தெங்கு ஏற்றுமதிகளின் அளவு பெருமளவுக்கு அதிகரித்தது.

1985 இல் அவதானிக்கப்பட்ட வளமாக்கிப் பயன்பாட்டின் வீழ்ச்சிப் போக்கு 1986 இலும் தொடர்ந்தும் காணப்பட்டமைக்கு பெரும்பாலும் குறைந்த விலைகளே காரணமாக இருக்கலாம். தெங்குத்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1986 இல் 23 சதவீதத்தால் 31,500 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியுற்றது. வளமாக்கிப் பயன்பாட்டின் வீழ்ச்சி விலைகள் அதிகுறைந்தனவாக காணப்பட்ட ஆண்டின் முதலரைப்பகுதியிலேயே அதிகளவு காணப்பட்டது. வளமாக்கிக்கான குறைந்த கேள்வி இலங்கை வங்கியினாலும் மக்கள் வங்கியினாலும் தொழிற்படுத்தப்படும் தெங்கு வளமாக்கிக் கொடுகடன் திட்டத்தின் செயற்பாட்டின்மீது அதன் தாக்கத்தினைக் கொண்டிருந்தது. பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் மொத்த தொகையான ரூ. 33 இலட்சம் 1985 இல் வழங்கப்பட்ட தொகையின் அரைப்பங்கிற்கும் குறைவானதாகும்.

1985 இல் பல்வகை உதவித்திட்டங்களின் கீழ் முன்னேற்றம் காணப்பட்ட பயிர்ச் செய்கை வழிமுறைகள் 1986 இலும் பேணப்பட்டன. புத்தாக்கம் செய்யப்பட்ட காணிகளின் அளவு மேலும் 22 சதவீதத்தினால் 7,605 எக்டேயர்களாக உயர்வடைந்ததுடன் இக்கணக்கில் செலுத்தப்பட்ட மொத்த உதவுதொகை ரூ. 116 இலட்சமாக 50 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்தது. கீழ்ப்பயிரிடல், மீள்பயிரிடலின் கீழுள்ள பரப்பு 4,206 எக்டேயர்களாக 3 சதவீதத்தால் அதிகரித்ததுடன் இந் நோக்கத்திற்காகக் கொடுக்கப்பட்ட மொத்த உதவுதொகை 11 சதவீதத்தினால் ரூ. 203 இலட்சத்திற்கு அதிகரித்தது. எனினும் தெங்கு பயிரிடப்பட்ட புதிய நிலம் (0.4 எக்டேயர்களுக்குக் குறைவான சிறு உடமையாளர் தவிர) 6 சதவீதத்தால் 1,465 எக்டேயர்களாக வீழ்ச்சியடைந்தமை பெருமளவிற்குக் குறைந்த சந்தை விலைகளைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. இது தொடர்பாக வழங்கப்பட்ட மொத்த உதவுதொகையான ரூ. 133 இலட்சம் முன்னைய ஆண்டின

தைவிட 2 சதவீதம் குறைவானதாக விளங்கியது. மறுபக்கத்தில் சிறு உடமைகளில் புதிதாக பயிரிடப்பட்ட அளவு (0.4 எக்டேயர்களுக்கும் குறைந்த) 48 சதவீதத்தால் 783 எக்டேயர்களுக்கு அதிகரித்ததுடன் முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட உதவுதொகையான ரூ. 16 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 27 இலட்சங்கொண்ட உதவுதொகையும் வழங்கப்பட்டது.

ஏனைய பயிர்களை பயிரிடுவதான தெங்கு நிலங்களின் இடைப்பயிர்ச்செய்கை 1986 இல் கலப்புப் பதிவுகளைக்காட்டின. கால்நடைகளுக்கான புல்லுடனை இடைப்பயிரிடல் 1986 இல் 56 சதவீதத்தினால் 50 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியுற்றது. மாறாக மிளகு, கோப்பி ஆகியவற்றுடனை இடைப்பயிர்ச்செய்கைப் பரப்பளவு முறையே 51 சதவீதத்தினாலும் 15 சதவீதத்தினாலும் 131 எக்டேயர்களாகவும் 101 எக்டேயர்களாகவும் உயர்வடைந்தன. கோப்பி, மிளகு ஆகியவற்றை இடைப் பயிர்ச்செய்கையாக மேற்கொள்ளும் விருப்பம் அதிகரித்தமைக்கு அண்மைய காலங்களில் இப்பயிர்களுக்கு கிடைத்த நல்ல விலைகளே பெருமளவு காரணமாகும்.

## அட்டவணை 1.12

## தெங்குப் புள்ளி விபரங்கள் 1984—1986

| விடயம் | அலகு | 1984 | 1985 | 1986 (அ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி (ஆ) ... | ப. இ. காய்களில் | 1,942 | 2,958 | 3,041 |
| 1.1. தேங்காய்த் துருவல் ... | ப. இ. காய்களில் (இ) | 221 | 362 | 428 |
| 1.2. தேங்காய் எண்ணெய் ... | ப. இ. காய்களில் (இ) | 295 | 1,038 | 1,146 |
| 1.3. உலர்த்தியதேங்காய்ஏற்றுமதிகள் ... | ப. இ. காய்களில் (இ) | 12 | 37 | 48 |
| 1.4. உடன்காய் ஏற்றுமதிகள் .. | ப. இ. காய்களில் | 4 | 10 | 18 |
| 1.5. உள்நாட்டு தேங்காய் நுகர்வு (ஈ) .. | ப. இ. காய்களில் | 1,404 | 1,425 | 1,450 |
| 2. சராசரி விலை | | | | |
| 2.1. கொழும்பு ... | காய்க்கு ரூபா | 4.07 | 2.18 | 1.83 |
| 2.2. ஏற்றுமதி க. ஏ. பெ. ... | காய்க்கு ரூபா | 6.48 | 3.59 | 1.57 |
| 3. வளமாக்கி வழங்கல்கள் ... | '000 மெ. தொ. | 50.0 | 41.0 | 31.5 |
| 4. உற்பத்திச் செலவு ... | காய்க்கு ரூபா | 0.63 | 0.64 | 0.70 |
| 5. மீள் பயிரிடல்/கீழ் பயிரிடல்(உ) ... | எக்டேயர்கள் | 2,553 | 4,102 | 4,206 |
| 6. புதிய பயிரிடல் (உ) ... | எக்டேயர்கள் | 1,580 | 1,561 | 1,465 |
| 7. ஏற்றுமதி வருவாய்கள் ... | ப. இ. ரூபா | 2,118 | 3,093 | 2,389 |
| | (சிஎஉ ப. இ.) | (81) | (112) | (73) |
| 7.1. உள்ளீட்டு உற்பத்திகள் ... | ப. இ. ரூபா | 1,553 | 2,383 | 1,609 |
| | (சிஎஉ. ப. இ.) | (59) | (86) | (49) |
| 7.2. ஏனைய உற்பத்திகள் ... | ப. இ. ரூபா) | 565 | 710 | 780 |
| | (சிஎஉ. ப. இ.) | (22) | (26) | (24) |
| 8. மொ. உ. உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (ஊ) ... | | 4.4 | 3.3 | 2.6 |

மூலங்கள்: தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை.
தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை,
தேசிய வளமாக்கிச் செயலகம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை.

(ஆ) மதிப்பீடு (உலர்த்திய தேங்காய் இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு சீராக்கஞ் செய்யப்படுவதன் காரணமாக பகுப்பாய்வின் கூட்டுத்தொகை மொத்தத்துடன் ஒத்திருக்கமாட்டாது.)

(இ) தேங்காய்க்குச் சமனை ஒரு — மெற். தொன் தேங்காய்த் துருவல் = 6,800 காய்கள்.
— மெற். தொன் எண்ணெய் = 8,000 காய்கள்.
— மெற். தொன் உலர்த்திய தேங்காய் = 4,925 காய்கள்.

(ஈ) தலைக்குரிய வீட்டு நுகர்வு ஆண்டுக்கு 90 காய்களென்ற அடிப்படையில் மதிப்பிடப்பட்டது. கைத்தொழில் பயன்பாட்டினைத் தவிர.

(உ) விபரமான தரவுகள் கிடைக்காமையின் காரணமாக 0.4 எக்டேயர்களுக்கும் குறைவான உடைமைகளில் மேற்கொள்ளப்பட்ட பயிரிடல் நடவடிக்கைகளை இது உள்ளடக்கவில்லை.

(ஊ) உற்பத்தி செய்தலும் பதனிடலும் மட்டும்.

தெங்கு விலைகளின் கடுமையான தளம்பல்கள், காலநிலையின் மாறுபடும் தன்மையினுல் பயிர்கள் பாதிப்புக்குள்ளாகும் தன்மை என்பனவற்றைக் கருத்திற் கொள்கையில் தெங்குப் பயிரின் மரபுவழித் தனிப்பயிர்ச்செய்கையாளர்கள் அவர்களின் பொதுவான ஆற்றலை முன்னேற்றுவதற்கு இடைப்பயிர்ச் செய்கை நல்லதொரு வழியை வழங்குகின்றது. ஆற்றல்மிக்க இடைப்பயிர்ச்செய்கை தனிப்பயிர்ச்செய்கையாளருக்காக தீர்மானிக்கப்பட்டிருக்கும் தென்னை மரங்களின் தற்போதைய செறிவை குறைக்குமாறு நிர்ப்பந்திக்குமாகையால் இது ஐயத்திற்கிடமின்றி நீண்டகால திட்டமிடலை அவசியமானதொன்றாக்கும்.

முக்கியமாக தெங்கு உற்பத்தி செய்யும் நாடுகளிலிருந்தான அதிகரித்த நிரம்பல், போட்டிரீதியான எண்ணெய்களும் கொழுப்புக்களும் கிடைத்தல் என்பனவற்றின் காரணமாக 1986 இன் பெரும்பகுதியில் தெங்கு உற்பத்திகளுக்கான வாய்ப்புக்கள் தொடர்ந்தும் தெளிவற்றதாகவே காணப்பட்டது. ஆண்டின் முதலிரண்டு காலாண்டுகளிலும் அனேகமான தெங்கு உற்பத்திகளின் சராசரி விலைகள் (க.ஏ.பெ.) ஏறத்தாழ முன்னைய ஆண்டின் அரைப்பங்காக விளங்கின. விலைகளின் உறுதியான வீழ்ச்சி ஆண்டின் மூன்றும் காலாண்டிலும் தொடர்ந்தும் காணப்பட்டாலும் அதன்பின்பு விலைகள் உயர்வடையத்தொடங்கின. பிலிப்பைன்சில் நிலவிய உறுதியற்ற அரசியல் நிலைமையும் மற்றைய முக்கிய உற்பத்தியாளர்களின் நிரம்பலில் ஏற்பட்ட குறைபாடுகளும் விலைகள் பின்னர் முன்னேற்றமடைந்தமைக்குக் காரணமாக விளங்கின.

தாழ்வுற்ற விலைகள் ஏற்றுமதித்தீர்வைகளில் மேலும் குறைப்புக்களை அவசியமாக்கின. தேங்காய்த்துருவல்கள் மீதான ஏற்றுமதித்தீர்வைகள் 1985 இன் மெற்றிக் தொன்னொன்றுக்கு ரூ. 5,000 இலிருந்து மெற்றிக் தொன்னொன்றுக்கு ரூ. 2,500 ஆக அரைப்பங்காக்கப்பட்டவேளையில் உலர்த்திய தேங்காய்மீதான தீர்வை ரூ. 4,750 இலிருந்து ரூ. 2,000 ஆக 1986 ஏப்பிறல் 3 ஆம் நாளிலிருந்து குறைக்கப்பட்டது. மேலுமொரு ஊக்குவிப்பாக உலர்த்தியதேங்காய், தேங்காய் எண்ணெய், தேங்காய்த்துருவல், உடன்தேங்காய் ஆகியவற்றின் ஏற்றுமதிகள் மீது விதிக்கப்பட்ட தீர்வைகள் இடைநிறுத்தப்பட்டன.

1986 இல் தேங்காயொன்றுக்கான சராசரி கொழும்புச்சந்தைவிலை முன்னைய ஆண்டின் தாழ்வுற்ற மட்டத்திலிருந்து மேலும் 16 சதவீதத்தால் ரூ. 1.83 ஆக வீழ்ச்சியடைந்தது. போக்குவரத்துக்கட்டணங்களையும், கொழும்புச் சந்தை வரைக்குமான தரகர் கட்டணக், கொடுப்பனவுகளையும் கணக்கில் எடுக்கும்போது தேங்காய் ஒன்றின் பண்ணைவிலை அநேகமாக உற்பத்திச் செலவிற்கும் குறைவானதாகவே இருந்திருக்கும். காயொன்றிற்கான உற்பத்திச்செலவு முன்னைய ஆண்டின் ரூ. 0.64 உடன் ஒப்பிடுகையில் 1986 இல் ரூ. 0.70 ஆக மதிப்பிடப்பட்டது. வளமாக்கிப் பயன்பாட்டில் இத்தொழிலுக்கு உதவியளிக்கும் நோக்கில் புதிதாக உருவாக்கப்பட்ட தெங்கிற்கான சமநிலைப்படுத்தும் நிதியம் தெங்கு வளமாக்கி மீது மெற்றிக்தொன் ஒன்றுக்கு ரூ. 150 கொண்ட தள்ளுபடி ஒன்றினை வழங்கியது.

**சிறு ஏற்றுமதிப்பயிர்கள்**

பல நீண்டநாள் பயிர்களை உள்ளடக்கும் சிறு ஏற்றுமதிப்பயிர்கள் வேளாண்மைக் காலநிலைச் சூழல்கள் அவற்றின் பயிர்ச் செய்கைக்கு சாதகமாகவுள்ள ஓரளவு மத்திய, தாழ்நில ஈரவலய மாவட்டங்களிலேயே பெருமளவிற்குப் பயிரிடப்படுகின்றன. இப்பயிர்கள் வீட்டுத் தோட்டங்களில் கலப்புப் பயிர்களாகவே பெரும்பாலும் பயிரிடப்படுகின்றன. இவற்றின் பயிர்ச் செய்கையின் குறிப்பிடத்தக்க தன்மையாதெனில் பயிர்ச் செய்கையின் கீழுள்ள பரப்பளவையோ அல்லது வெளியீட்டினையோ சுலபமாக மதிப்பிடுவதை கடினப்படுத்துவதேயாகும். இதன்விளைவாக உள்நாட்டு நுகர்வு மிகக்குறைவானது என்ற கருதுகோளின் அடிப்படையில் உற்பத்திக்கான நியாயமான பதிலீடாக ஏற்றுமதி அளவினைக்கருதி அதன் மூலம் இத்துறையின் செயற்பாடு கண்காணிக்கப்பட்டது.

1986 இல் சிறு ஏற்றுமதிப்பயிர்த்துறையின் செயலாற்றம் கலப்புற்றுக் காணப்பட்டதை ஏற்றுமதித்தரவுகள் காட்டுகின்றன. 1986 இல் கராம்பு, சாதிக்காய், ஏலக்காய், மிளகு ஆகியவற்றின் ஏற்றுமதிகளில் கணிசமானளவு அதிகரிப்புகள் காணப்பட்டன. கராம்பின் ஏற்றுமதி அளவு 1983 இன் அதியுயர் மட்டத்தினைத் தொடர்ந்து உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்ட பின்பு இருமடங்கிற்கும் மேலாக அதிகரித்தது. சாதிக்காய், ஏலக்காய் ஆகியவற்றின் ஏற்றுமதிகள் முறையே 17 சதவீதத்தாலும் 18 சதவீதத்தாலும் உயர்வடைந்தன. மிளகு ஏற்றுமதி அளவு 5 சதவீதத்தால் மிதமாக அதிகரித்தது. முன்னைய ஆண்டில் கணிசமானளவிற்கு உயர்வடைந்த கோப்பி, எள்ளு, கொக்கோ போன்ற இத்துறையிலுள்ள முக்கிய பயிர்களின் ஏற்றுமதி அளவுகள் 1986 இல் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. கறுவா ஏற்றுமதிகள் ஏறத்தாழ 1985 இனைப் போன்றே மாற்றமின்றிக் காணப்பட்டன.

சிறு ஏற்றுமதிப் பயிர்த்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1985 இல் 2,200 மெற்றிக் தொன்களிலிருந்து 1986 இல் 2,400 மெற்றிக் தொன்களுக்கு சிறிதளவால் அதிகரித்தது.

இத்துறையில் கூடியளவு முதலீடு செய்வதற்கு பயிர்ச்செய்கையாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் சிறு ஏற்றுமதிப்பயிர் உதவித்திட்டத்தின்கீழ் மீள்பயிரிடல், புதிய பயிரிடல், புத்தாக்கம் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட உதவுதொகைகள் 1986 இல் கணிசமானளவிற்கு அதிகரித்தது. கொக்கோவுக்கு வழங்கப்பட்ட மீள்பயிரிடல் உதவுதொகை எக்டேயர் ஒன்றிற்கு ரூ. 26,440 ஆக அமைந்து முன்பு வழங்கப்பட்ட உதவுதொகையைவிட நான்கு மடங்காக விளங்கியவேளையில் கறுவாவிற்கு வழங்கப்பட்ட தொகை எக்டேயர் ஒன்றுக்கு ரூ. 24,710ஆக அமைந்து ஆறுமடங்கிற்கும் கூடுதலாக விளங்கியது. இயலளவை அதிகரிக்கவும் பதனிடல் தரத்தினை உயர்வடையச் செய்யும் நோக்கிலும் சிறு ஏற்றிமதிப் பயிர்கள் பதனிடும் பிரிவுகளுக்கான உதவித்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவுதொகைகளின்மீது இவ்வாறான அதிகரிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் தனிப்பயிரிடலை ஊக்குவிப்பதற்காக 1.2 எக்டேயர்களுக்கு மேலான பரப்பளவுக்கு ஏற்கனவே உள்ள உதவுதொகையில் 50 சதவீதம் மேலதிகமாக வழங்கப்பட்டது .எனினும் கலப்புப் பயிரிடலைப் பொறுத்தவரையிலும்கூட நடைமுறையில் உள்ள உதவுதொகையின் 25 சதவீதம் மேலதிகமாக கொடுக்கப்பட்டதெனினும் இது தனியொரு அனுமதிப்பத்திரத்தின்மீது 1.2 எக்டேயர்களுக்கும் அதற்குக் குறைவான பரப்பளவுக்குமென மட்டுப்படுத்தப்பட்டது.

சிறு ஏற்றுமதிப்பயிர் உதவித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மொத்த உதவு தொகை 1985 இன் ரூ. 86 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1986 இல் ரூ. 91 இலட்சத்திற்கு வகைகூறியது. இதில் 47 சதவீதம் மிளகு, கோப்பி ஆகியனவற் றின் புதிய பயிரிடலுக்காக இருந்த வேளையில் 23 சதவீதம் கலப்பு வீட்டு தோட் டப் பயிரிடலுக்குரியதாகவிருந்தது. சிறு ஏற்றுமதிப்பயிர்கள் திணைக்களத்தால் திரட்டப்பட்ட தரவுகளின் அடிப்படையில் சிறு ஏற்றுமதிப்பயிர்களின் மீளப் பயிரிடப்பட்ட, புதிதாகப் பயிரிடப்பட்ட பரப்பளவு 1986 இல் 556 எக்டேயர் களுக்கு 31 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. கொக்கோ, கறுவா ஆகியவற்றின் புதிய பயிரிடல் ஒவ்வொன்றும் 48 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த வேளையில் கோப்பி, கராம்பு, ஏலக்காய் ஆகியவற்றின் புதிய பயிரிடல் முறையே 37 சத வீதத்தாலும் 16 சதவீதத்தாலும் 54 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றன. மாறாக மிளகின் புதிய பயிரிடலும் மீள் பயிரிடலும் 4 சதவீதத்தால் மிதமாக உயர் வடைந்தது.

பயிரிடல் செய்முறைகளின்மீது அவதானிக்கப்பட்ட உதவுதொகைகளின் தாக்கம் பற்றி விமர்சிப்பது மிகவும் காலத்திற்கு முந்தியதாக இருக்கும்வேளை யில், நம்பத்தகுந்த தரவு அடிப்படை ஒன்று இல்லாமை இத்துறைக்கு ஏற்ற உதவித் திட்டமொன்றை திட்டமிடுவதனை தடைசெய்யும் முக்கிய காரணி யாக விளங்குகின்றது. முக்கிய ஏற்றுமதி வருவாய் வழங்குனராக வளர்வதற்கு தேவையான உள்ளார்ந்த வளத்தினை கணிசமானளவிற்கு கொண்டுள்ள இம் முக்கிய துறையினை வளர்ச்சியடையச் செய்வதற்கு நம்பத்தகுந்த தரவினை யும் துணைத்துறை நிகழ்ச்சித்திட்டத்தையும் அபிவிருத்தி செய்வது இன்றியமையா தது என்பது நீண்டகாலமாக உணரப்பட்டுள்ளது.

## நெல்

முன்னைய ஆண்டில் அதிகூடிய மட்டத்தினை அடைந்த நெல் உற்பத்தி 1986 இல் பாதிக்கப்பட்டு சிறு பின்னடைவைக் கொண்டிருந்தது. தற்காலிகமாக 26 இலட்சம் மெற்றிக் தொன்களாக மதிப்பிடப்பட்ட மொத்த உற்பத்தி (1,240 இலட்சம் புசல்கள் நெல் அல்லது 18 இலட்சம் மெற்றிக் தொன்கள் அரிசி) 1985 இன் உற்பத்தியைவிட 2.5 சதவீதம் குறைவானதாகும்.

உற்பத்தியின் வீழ்ச்சியானது முன்னைய பெரும்போகத்தினைவிட 3.6 சதவீத வீழ்ச்சியினைப் பிரதிபலித்ததுடன், 17 இலட்சம் மெற்றிக் தொன்களாக மதிப்பிடப் பட்டுள்ள 1985/86 பெரும்போகத்தின் குறைவான அறுவடையில் கூடியளவு காணக்கூடியதாகவுள்ளது. வெளியீட்டில் பெரும்பாலும் முழு வீழ்ச்சியும் நெல் பயிரிடும் மாவட்டங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிரதிபலித்தது. திருகோணமலை, மட்டக்களப்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் கணிசமானளவு உற்பத்தி இழப்புக்கள் பதியப்பட்டன. இப்பகுதியின் குறைவான உற்பத்திக்கு பயிரிடப்பட்ட பரப்பளவில் ஏறத்தாழ 20 சதவீத வீழ்ச்சி, மொத்த விதைக்கப்பட்ட பரப்பளவில் ஏறத்தாழ 23 சதவீதம் கொண்ட கூடிய அளவு பயிரிழப்பு (முன்னைய ஆண்டின் 5 சதவீதத்திற்கு எதிராக) முக்கியமாக திருகோணமலை மாவட்டத்தில் நெல் உற்பத்தியைப் பாதித்த கந்த ளாய் அணைக்கட்டு உடைப்பு என்பனவே முக்கிய காரணிகளாகும். எனினும் நாட்டின் ஏனைய பகுதிகளில் சாதகமான கால நிலை நிலைமைகள் நிலவியதால் கணிசமானளவுக்கு வளமாக்கிப்பயன்பாட்டின் பெருமளவு காரணமாக அப்பகுதி களின் உற்பத்தியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது இப்பகுதியில் பெரும் போக உற்பத்தியின் வீழ்ச்சியினை ஓரளவுக்கு எதிரீடு செய்தது.

*1986* சிறுபோகத்தில் நெல் உற்பத்தி 9 இலட்சம் மெற்றிக் தொன்களாக மதிப்பிடப்பட்டதுடன் இது முன்னைய சிறுபோகத்திற்கு ஏறத்தாழ சமனாக விளங்கியது. விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பளவிலும் வளமாக்கிப்பயன்பாட்டிலும் முறையே 10 சதவீதம், 6 சதவீத அதிகரிப்புக்கள் காணப்பட்ட போதும் ஆண்டின் பிற்பகுதியில் பாதகமான காலநிலை காரணமாக சராசரி விளைச்சலில் வீழ்ச்சி காணப்பட்டது.

*1986* இல் நெல்லின் கீழுள்ள பரப்பளவு 2 சதவீதத்தினால் சிறிதளவால் அதிகரித்தது. இதற்கு பெரும்போகத்தில் 3 சதவீத வீழ்ச்சியை எதிரீடுசெய்த சிறுபோக காலத்தில் பயிரிடப்பட்ட பரப்பளவில் ஏற்பட்ட 10 சதவீத அதிகரிப்பே முழுமையான காரணமாகும். முக்கிய நீர்ப்பாசனப் பகுதிகளில் சிறிதளவு அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டன.

அட்டவணை *1.13*

**நெல்துறை மீதான புள்ளி விபரங்கள் 1985—1986**

| விடயம் | அலகு | 1985 | | | 1986(அ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பளவு ... | '000எக்டேயர்கள் | 570 | 312 | 882 | 555 | 342 | 897 |
| வளமாக்கி வழங்கல்கள்(ஆ) | '000மெ.தொன்கள் | 84 | 69 | 153 | 124 | 73 | 197 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ. ப. இ. | 83 | 38 | 121 | 100 | 89 | 189 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த பரப்பளவு ... | '000எக்டேயர்கள் | 560 | 305 | 865 | 527 | 310 | 837 |
| எக்டேயருக்கான விளைச்சல் (இ) ... | கி. கிறாம்கள் | 3,498 | 3,343 | 3,444 | 3,585 | 3,287 | 3,476 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய பரப்பளவு ... | '000எக்டேயர்கள் | 498 | 270 | 768 | 469 | 272 | 741 |
| உற்பத்தி ... | '000மெ.தொன்கள் ('000புசல்கள்) | 1,751 (83,908) | 910 (43,607) | 2,661 (127,515) | 1,688 (80,888) | 907 (43,463) | 2,595 (12,4351) |
| உ.வி.தி. கீழ் கொள்வனவு செய்யப்பட்டவை(ஈ) ... | '000மெ. தொன்கள் | 94 | 07 | 101 | 138 | 15 | 153 |
| இறக்குமதி அரிசி (நெல்லிற்குச் சமன்) ... | '000மெ.தொன்கள் | — | — | 182 (260) | — | — | 220 (314) |

மூலங்கள்: குடிமதிப்பு புள்ளி விபரத்திணைக்களம்,
வேளாண்மைத் திணைக்களம்,
வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சு,
நெற் சந்தைப்படுத்தும் சபை,
உணவு ஆணையாளர் திணைக்களம்.
இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

(ஆ) பயிர்ச்செய்கை ஆண்டினதும் கலண்டர் ஆண்டினதும் வளமாக்கி வழங்கல்கள் அடிப்படையில் மாறுபட்டதாகும். பயிர்ச்செய்கை ஆண்டு பெரும்போகத்தையும் (செத்தெம்பர்/ஒற்ரோபர்-மாச்சு/எப்பிறல்). சிறுபோகத்தையும் (எப்பிறல்/மே-ஓகத்து/செத்தெம்பர்) உள்ளடக்கும்.

(இ) பெரும்போக சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு, குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. அத்தரவுகள் பயிர் அறுவடை அளவீடுகள் அடிப்படையில் அமைந்தனவாகும். அதேவேளையில், மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் மொத்த விளைவு கணக்கிடப்படுகிறது.

(ஈ) ஓகத்திலிருந்து திசெம்பர் காலப்பகுதியில் சிறுபோக அறுவடை கொள்வனவு செய்யப்பட்டவேளையில் சனவரியிலிருந்து யூலை காலப்பகுதியில் பெரும்போக நெல் அறுவடை கொள்வனவு செய்யப்பட்டது.

1986 இல் அறுவடை செய்யப்பட்ட மொத்த அளவு 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 1985/86 பெரும்போக காலத்தில் அறுவடை செய்யப்பட்ட பரப்பளவு 6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தவேளையில் 1986 சிறுபோகத்தில் அறுவடை செய்யப்பட்ட பரப்பளவு 2 சதவீதத்தால் உயர்வடைந்தது. 1986 இல் விதைக்கப்பட்ட பரப்பளவுக்கும் அறுவடைசெய்யப்பட்ட பரப்பளவிற்குமிடையிலான வேறுபாடு 60,000 எக்டேயர்கள் அல்லது விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பில் 7 சதவீதமாகும். சிறுபோகத்தில் பயிர்அழிவு பெரும்போகத்தின் 5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் விதைக்கப்பட்ட மொத்தப்பரப்பளவின் 9 சதவீதமாக அதிகளவாகக் காணப்பட்டது. 1986 சிறுபோகத்தில் அதியுயர் பயிர் அழிவு குருநாகல் மாவட்டத்தில் காணப்பட்டதுடன் மொத்தமாக விதைக்கப்பட்ட பரப்பளவில் அறுவடை செய்யப்பட்ட பரப்பளவு 54 சதவீதமாக மட்டுமே இருந்தது. நாடு முழுவதிலும் விதைக்கப்பட்ட பரப்பளவில் ஏறத்தாழ 14 சதவீதத்திற்கு வகைகூறும் இம்மாவட்டத்தின் உயர்வான பயிர் அழிவு நடைமுறை ஆண்டின் பிற்பகுதியில் சில முக்கிய நெல் உற்பத்தி செய்யும் பகுதிகளில் நிலவிய பாதகமான காலநிலைமைகளின் பரந்தளவு தன்மையை வலியுறுத்துவதாகவுள்ளது.

வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சின்படி 1985/86 பயிர்ச் செய்கை ஆண்டில் நெல்துறைக்கான வளமாக்கி வழங்கல் 197,000 மெற்றிக் தொன்களாக விளங்கியது. முன்னைய ஆண்டின் வழங்கல்களுடன் ஒப்பிடுகையில் இது 29 சதவீத அதிகரிப்பாகும். 1985/86 பெரும்போகத்தில் வளமாக்கி வழங்கல்கள் முன்னைய பெரும்போக வழங்கலைவிட 40,000 மெற்றிக் தொன்களால் அல்லது 48 சதவீதத்தினால் அதிகரித்த போதிலும் 1986 சிறுபோகத்தின் வழங்கல்கள் பயிரிடப்பட்ட பரப்பளவில் 10 சதவீத அதிகரிப்பு இருந்தும் 6 சதவீதத்தால் மாத்திரமே அதிகரித்தது. இது முக்கியமாக கால நிலைக்காரணிகளினால் ஏற்பட்டதாகும். எக்டேயர் ஒன்றுக்கு பயன்படுத்தப்பட்ட வளமாக்கியின் சராசரி அளவு பெரும்போகத்தில் 52 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் சிறுபோகத்தில் 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. தேசிய வளமாக்கிச் செயலகத்தின்படி கலண்டர் ஆண்டு அடிப்படையில் நெல்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1986 இல் 213,539 மெற்றிக் தொன்களாக விளங்கி 1985 இன் வழங்கலினைவிட 5 சதவீத அதிகரிப்பினைக்காட்டியது.

கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்கப்பட்டுவந்த வீழ்ச்சிப்போக்குக்கு மாறாக 1986 இல் உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் நெல் சந்தைப்படுத்தும் சபையின் நெல் கொள்வனவுகள் 51 சதவீதத்தால் அதிகரித்தன. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்நாட்டுக்குழப்பங்கள் காரணமாக இப்பகுதிகளின் கொள்வனவுகளில் பெரும் வீழ்ச்சிகள் காணப்பட்டபோதிலும் இக்கொள்வனவு அதிகரிப்பு சந்தையின் மேலும் கூடியபங்கினை கொண்டிருப்பதற்கு நெல் சந்தைப் படுத்தல் சபையினை இயலச்செய்த 1986 இன் வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட புசலொன்றிற்கு ரூ. 62.50 இலிருந்து ரூ. 70.00 ஆக உத்தரவாத விலைத்திட்டவிலையின் மேனோக்கிய திருத்தம் பெருமளவுக்கு காரணமாகும். மாவட்டரீதியிலான செயலாற்றம், அநுராதபுரம் மாவட்டத்தின் நெல் கொள்வனவுகள் மூன்று மடங்கிற்கும் மேலாக அதிகரித்தவேளையில் பொலனறுவை மாவட்டம் முன்னைய ஆண்டின் கொள்வனவினைவிட 88 சதவீத அதிகரிப்புப் பதிவு செய்யப்பட்டமையைக் காட்டின. இம்மாவட்டங்களில் நிலவிய உள்நாட்டு குழப்பங்கள் காரணமாக தனிப்பட்ட வியாபாரிகள் பெருமளவு இருப்புக்களை கொண்டு செல்வதற்கு விரும்பாமையும் நெல் சந்தைப்படுத்தும் சபையின் அதிகரித்த செயலாற்றத்திற்கு உதவியளித்திருக்கலாம்.

இவ்வாண்டில் சிறு பின்னடைவு காணப்பட்டபோதிலும் நெல் உற்பத்தி 1986 இன் நுகர்வுத்தேவைகளை ஈடுசெய்வதற்கு கூடியளவு போதுமானதாக விருந்தது. மொத்த நெல் உற்பத்தியின் அரிசியின் சமான அளவு விரயங்களுக்கும் விதைநெல் தேவைகளுக்கும் சீராக்கம் செய்தபின்பு 16 இலட்சம் மெற்றிக் தொன்களுக்கு வகைகூறியது. இதுநாட்டின் நுகர்வுத் தேவைகளுக்கு* ஏறத்தாழ சமனுக இருந்தது. எனினும் 1986 இல் 220,000 மெற்றிக் தொன்கள் அரிசி உணவு ஆணையாளரினுல் தாங்கிருப்பை பேணுவதற்கு இறக்குமதி செய்யப் பட்டது.

நெல்லின் சராசரி திறந்த சந்தைவிலை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சிறிதளவு உயர்வானதாக விளங்கியதற்கு பெருமளவுக்கு அதிகரித்த உத்தரவாத விலையே காரணமாகும். ஒரு புசல்நெல்லின் சராசரிவிலை ரூ. 84.81 ஆக விளங்கி 1985 இனைவிட 5 சதவீதம் உயர்வானதாகவும் உத்தரவாத விலையைவிட ஏறத்தாழ 21 சதவீதம் உயர்வானதாகவும் விளங்கியது. இதே போக்கினைத் தொடர்ந்து பச்சை, புளுங்கல், சம்பா வகை அரிசியின் திறந்த சந்தை விலைகளும் முன்னைய ஆண்டினைவிட சிறிதளவு உயர்வானதாக விளங்கியது. இவ்வாறிருந் துங்கூட இவ்வாண்டில் விலைகள் ஏறத்தாழ உறுதியானதாக விளங்கின. மிகை யான மாவட்டங்களில் சம்பாவின்விலை கிலோக்கிறும் ஒன்று ரூ. 8.00 இற்கும் குறைமாவட்டங்களில் கிலோக்கிறும் ஒன்று ரூ. 13.00 இற்கும் இடையில் மாற் றமடைந்தது. இதேவேளை புளுங்கல் அரிசிவிலைகள் கிலோக்கிறும் ஒன்று ரூ. 7.50 இற்கும் ரூ. 10.00 இற்கும் இடையே மாற்றமடைந்தது. பச்சை அரிசியின் விலை கிலோக்கிறும் ஒன்று ரூ. 6.50 இற்கும் ரூ. 9.50 இற்கும் இடையே தளம்பலைக் கொண்டிருந்தது.

நெல் பயிர்ச்செய்கையின் கீழ் புதிய நிலங்கள் வருவதால் குறிப்பாக துரித மகாவலி திட்டத்தின் கீழான உறுதிப்படுத்தப்பட்ட நீர்ப்பாசன வழங்கலுடன் அண்மிய எதிர்காலத்தில் நெல் உற்பத்தியில் மிகை ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. அப்படியானவிடத்து அரிசி ஏற்றுமதிக்கான ஏற்பாடுகள் காணப்படாதவேளையில் நெல்லின் விலைகள் கடுமையாக வீழ்ச்சியடைவது மிகவும் சாத்தியமானதோடு இது உற்பத்தியாளர் இலாபத்தினையும் பாதிக்கும். இச் சூழலில் நெல் வேளாண்மையாளருக்கு நியாயமான வருவாயினை உறுதிப்படுத்தும் பிரச்சனை நாட்டுக்கு ஒரு சவாலாக விளங்கும். இப்பிரச்சனையை வெற்றி கொள் வதற்கு ஒருவழி அரிசி, கோதுமைமா என்பனவற்றின் சார்புரீதியான விலைகளை சீராக்கம் செய்வதன்மூலமும் அரிசியை மூலமாகக் கொண்ட உற்பத்திகளை பதிலீ டாக பிரசித்தியடையச் செய்வதன் மூலமும் அரிசியின் பெருமளவு உள்நாட்டு நுகர்வினை ஊக்குவிக்க வேண்டியதாகவிருக்கும். மூலவளங்களின் திறமையான ஒதுக்குகளிலிருந்து நோக்குகையில் மற்றொரு சாத்தியமான வழிமுறை எல்லை நெல் நிலங்களை ஏனைய பயிர்களின் செய்கைக்காக மாற்றுதல் அல்லது வேறு ஏதாவது பாவனைக்காக பயன்படுத்துவது ஆகும். மேலும் பன்னுட்டுச் சந்தை களில் நல்ல கேள்வியினைக்கொண்ட அரிசியின் புதிய வகைகளை உருவாக்குவதும், பிரசித்தியடையச் செய்வதும் பயனனுள்ள முயற்சியாகும்.

---

* இலங்கை மத்திய வங்கியினுல் நடாத்தப் பெற்ற 1981/82ஆம ஆண்டிற்கான நுகர்வோர் சமூக பொரு ளாதார அளவீட்டின்படி தலைக்குரிய அரிசி நுகர்வு, ஆண்டொன்றிற்கு ஆளுக்கு ஏறத்தாழ 101 கிலோக் கிறும்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1986ஆம் ஆண்டிற்கான மொத்த நுகர்வினைக் கொண்ட மதிப்பீடு தலைக்குரிய நுகர்வினை 1986 இன் நடுவாண்டுக் குடித் தொகையினுல் பெருக்கியதன் மூலம் பெறப்பட்டது.

உற்பத்தியில் பாராட்டத்தக்க சாதனைகள் காணப்பட்டபோதிலும் நெல் பதனிடலில் பயன்படுத்தப்பட்ட காலத்திற்கு ஒவ்வாத தொழில்நுட்பங்கள் கணிசமானளவு விரயங்களையும் தரம்குறைந்த அரிசியையும் கொடுத்தன. இலங்கை அரிசி ஏற்றுமதிச்சந்தையில் நுழைவதற்கும் உள்நாட்டில் அரிசியை மூலமாகக் கொண்ட கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கும் பதனிடல் தொழில் நுட்பத்தை முன்னேற்றுவது அவசியமானதொன்றாகும். எனவே புதிய தொழில் நுட்பங்களையும் ஊக்குவிப்புக்களையும் அறிமுகப் படுத்துவதன் மூலம் அரிசி குற்றும் கைத்தொழிலை தரமுயர்த்துவது இன்றியமையாத தேவையாகும்.

சீனி

1986 இல் மொத்தச் சீனி உற்பத்தி 34,391 மெற்றிக் தொன்களாக மதி பிடப்பட்டதுடன் 1986 இன் உற்பத்தியைவிட 94 சதவீத அதிகரிப்பினையும் கொண்டிருந்தது. இவ் உள்நாட்டு உற்பத்தி உள்நாட்டுத்தேவையில் 11 சதவீதத் தினை ஈடுசெய்யுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கைச் சீனிக் கூட்டுத்தா பனம் உற்பத்தியில் 62 சதவீதத்திற்கு வகைகூறியவேளையில் 1986 இல் சீனி உற்பத்தியில் புகுந்த தனியார்துறை அதனைத் தொடர்ந்து மிகுதி உற்பத்திக்கும் பொறுப்பாக இருந்தது. இவ்வாண்டில் தொழிற்படத் தொடங்கிய புதிய தொழிற்சாலைகள் செவனகலவிலும், பெல்வத்தையிலும் அமைந்திருந்தன.

கந்தளாய், இங்குரான ஆகிய இடங்களிலுள்ள இலங்கைச் சீனிக்கூட்டுத் தாபனத்தின் தொழிற்சாலைகள் 1986 செத்தெம்பரில் தொடங்கிய செவனகலவில் உள்ள புதிய தொழிற்சாலையுடன் சேர்த்து இவ்வாண்டுக்காலத்தில் 21,275 மெற்றிக் தொன் சீனியை உற்பத்தி செய்தன. முன்னைய ஆண்டின் உற்பத்தி மட்டத்துடன் ஒப்பிடுகையில் இங்குரான தொழிற்சாலையின் உற்பத்தி 22 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தவேளையில் கந்தளாயின் உற்பத்தி 10 சதவீதத் தினால் வீழ்ச்சியுற்றது. எனினும் 1986 இல் இலங்கைச்சீனிக் கூட்டுத்தாபனத்தின் மொத்த உற்பத்தியில் ஏறத்தாழ 31 சதவீதத்திற்கு வகைகூறும் புதிய ஆலையின் சீனி உற்பத்தி மற்றைய தொழிற்சாலைகளின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியைக் கூடுதலாக இழப்பீடு செய்து, அரசதுறையின் சீனி உற்பத்தியில் 20 சதவீதம் கொண்ட பொதுவான அதிகரிப்பினை விளைவித்தது.

தனியார்துறையின் முழு உற்பத்தியும் இங்கிலாந்தின் பன்னாட்டு பூக்கர்ஸ்சி னால் முகாமைப்படுத்தப்படும் வரையறுக்கப்பட்ட பெல்வத்தை சீனிக்கூட்டுத் தாபனத்திலிருந்தே கிடைத்தது. இது 1986 யூனில் தொடங்கப்பட்டது. இக் கூட்டுநிலையத்தின் தொடக்க உற்பத்தி 13,116 மெற்றிக் தொன்கள் என மதிப் பிடப்பட்டுள்ளது. இது தொடக்கத்தில் எதிர் பார்க்கப்பட்ட இயலளவு வெளி யீடான 15,000 மெற்றிக் தொன்களை விட 13 சதவீதம் குறைவானதாகும்.

கரும்புச் செய்கையின் கீழான மொத்த நிலப்பரப்பு (முளைவிட்டது உட்பட) 1985 இன் 4,790 எக்டேயர்களிலிருந்து 1986 இல் 10,778 எக்டேயர்களுக்கு இரண்டு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தமைக்கு செவனகலவிலும், பெல் வத்தையிலும் புதிய நிலங்கள் பயிர்ச்செய்கையின் கீழ் கொண்டு வரப்பட்ட மையே முக்கிய காரணமாகும். இப்பரப்பில் ஏறத்தாழ 59 சதவீதம் இலங்கைச் சீனிக்கூட்டுத்தாபனத்தின் மூன்று தொழிற்சாலைகளின் கீழ் இருந்தவேளையில் மிகுதி 41 சதவீதம் வரையறுக்கப்பட்ட பெல்வத்தை சீனிக்கூட்டு நிலையத்தினால் முகா மைப்படுத்தப்பட்டன. கந்தளாய் தொழிற்சாலையின் கரும்புப்பயிர்செய்கையின்

கீழுள்ள நிலப்பரப்பு 2,118 எக்டேயர்களாக விளங்கி 18 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியவேளையில் இங்குரானத் தொழிற்சாலையின் கீழுள்ள பரப்பளவு 1986 இல் 2,188 எக்டேயர்களுக்கு சிறிதளவால் வீழ்ச்சியுற்றது. இவ்வாண்டில் செவனகல தொழிற்சாலையினுல் பயிரிடப்பட்ட பரப்பளவு 2,088 எக்டேயர்களாக இருந்தவேளையில் பெல்வத்தை சீனிக்கூட்டு நிலயத்தின் பயிரிடப்பட்ட பரப்பளவு 4,384 எக்டேயர்களாக விளங்கியது.

கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக வீழ்ச்சியுற்ற இங்குரான கந்தளாய், தொழிற்சாலைகளின் சீனிபெறும் வீதம் 1986 இல் முறையே 25 சதவீதத்திஞலும், 3 சதவீதத்திஞலும் அதிகரித்தன. 1986 இல் மிக உயர்ந்த 8.09 சதவீதமான சீனிபெறும் வீதத்தைக் கொண்டிருந்த கந்தளாய் தொழிற்சாலையைத்தொடர்ந்து 7.99 சதவீதத்தினை செவனகலவும், 7.96 சதவீதத்தினை பெல்வத்தையும் கொண்டிருந்தன. 1986 இல் சிறந்த சீனிபெறும் வீதம் அடையப்பட்டமைக்கு கரும்பில் சீனியின் கொள்ளளவு அதிகரிக்க உதவிய சாதகமான வானிலை நிலைமைகள் ஒருபுறமும் கந்தளாய், இங்குரான தொழிற்சாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்ட சிறந்த அண்மைக்காலப் பதனிடல் வசதிகள் மறுபுறமும் பெருமளவு காரணமாக இருந்தன. பெலவத்தையிலும், செவனகலவிலும் காணப்பட்ட உயர்ந்த சீனி பெறும் வீதத்திற்கு கரும்பின் சிறந்த தரமும் தகமைமிக்க பதனிடல் தொழில் நுட்பங்களுமே பெருமளவு காரணங்களாகும்.

வரையறுக்கப்பட்ட பெல்வத்தை சீனிக்கூட்டுத்தாபனத்திஞல் 20,138 மெற்றிக் தொன் கரும்பு கொள்வனவு செய்யப்பட்டபோதும் 1986 இன் தனிப்பட்ட பயிர்ச்செய்கையாளர்களிடமிருந்து தொழிற்சாலைகளிஞல் கொள்வனவு செய்யப்பட்ட கரும்பு 59,160 மெற்றிக் தொன்களுக்கு 27 சதவீதத்திஞல் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சிக்கு தனிப்பட்ட பயிர்ச்செய்கையாளரிடமிருந்து நியாயமான தொகைக்கரும்பினை வழமையாகக் கொள்வனவு செய்யும் இங்குரானத் தொழிற்சாலையின் கொள்வனவு குறைவடைந்தமையே பெருமளவு காரணமாகும். இத்தொழிற்சாலையின் வாங்கப்பட்ட கரும்பின் கூறு 38,426 மெற்றிக் தொன்களாக விளங்கி 1985 இல் கொள்வனவு செய்யப்பட்ட அளவினைவிட அரைப்பங்கிற்கும் குறைவாக இருந்தது. மற்றைய தொழிற்சாலைகளின் வாங்கப்பட்ட கரும்பின் கூறு தொடர்ந்தும் மிகச்சிறிதளவாகவே இருந்தது.

இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சாலைகளினது சீனியின் உற்பத்திச் செலவு பற்றிய மதிப்பீடுகள் கிடைக்கவில்லை. வரையறுக்கப்பட்ட பெல்வத்தை சீனிக் கூட்டுநிலயத்தின் உற்பத்திச் செலவு கிலோக்கிருமொன்றுக்கு ரூ. 24.57 என மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அரசாங்கம் சீனியின் திறந்த சந்தை விலைக்கும் உற்பத்திச் செலவுகட்குமிடையிலான வேறுபாட்டினை உதவு தொகையாக வழங்குவதற்கு உடன்பட்டது. உற்பத்திச்செலவு தற்போதைய திறந்த சந்தைவிலைகளைவிட மிக உயர்வாக இருக்கும் தன்மை கவனத்திற் கொள்ள வேண்டியதொரு விடயமாகும். இறக்குமதிகளை நீக்கும் நோக்குடன் இலங்கை உள்நாட்டு உற்பத்தியை வெற்றிகரமாக ஊக்குவிக்கவேண்டுமாயின் உள்நாட்டு நுகர்வோர் நியாயமற்றமுறையில் தண்டிக்கப்படாதிருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு உற்பத்திச் செலவினை போட்டி மட்டங்களில் பேணுவது இன்றியமையாததாகும்.

**சிறு உணவுப் பயிர்கள்**

ஒழுங்கான ஒரு முறையின்கீழ் பயிரிடப்படுகின்ற உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம் போன்ற சில பயிர்கள் நீங்கலாக பெரும்பாலான சிறு உணவுப்பயிர்கள் பெயர்ச்சி முறையிலான ''சேனை''ப் பயிர்ச்செய்கையின் கீழ் அல்லது வீட்டுத் தோட்டங்களில் கலப்புப் பயிர்களாகப் பயிரிடப்பட்டன. இந்நிலை பயிர்ச்செய்கையின் கீழும் உற்பத்தியின் கீழும் உள்ள பரப்பளவினை மதிப்பிடுவதில் பெரும் இடர்ப்பாட்டினை ஏற்படுத்தியமையின் காரணமாக இப்பயிர்கள் தொடர்பான தரவுகள் செப்பமற்ற மதிப்பீடுகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தன.

வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சினால் வழங்கப்பட்ட தற்காலிகத் தரவுகளின்படி கடந்த சில ஆண்டுகளாக குறைந்தளவு விளைவினைக் கொண்டிருந்த சிறு உணவுப்பயிர்த்துறை 1986 இல் சில முன்னேற்றங்களைக் காட்டியது. 1985/86 பெரும்போக காலத்தில் பெரும்பாலான சிறு உணவுப் பயிர்களின் உற்பத்தி கணிசமானளவு அதிகரித்த வேளையில் சிறுபோக உற்பத்தி சாதகமற்ற வானிலை நிலைமைகளின் காரணமாக குறிப்பாக வரண்ட வலயப் பகுதிகளில் சிறிதளவான பின்னடைவினைக் காட்டியது. சோயா அவரை, சின்ன வெங்காயம் என்பனவற்றின் உற்பத்தி கணிசமானளவில் அதிகரித்தவேளையில் சோளம், தட்டைப்பயறு, கடலை, எள்ளு, பயறு, மிளகாய் என்பன அதிகரிப்புக்களைப்பதிவுசெய்தன. மறுபுறத்தில் உருளைக்கிழங்கு, உழுந்து, குரக்கன் என்பனவற்றின் உற்பத்தி இவ்வாண்டில் வீழ்ச்சியுற்றது.

மிளகாய், சின்னவெங்காயம், தட்டைப்பயறு, சோயா அவரை என்பனவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு மகாவலி அபிவிருத்திச்செயற்றிட்டத்தின் கீழ் பயிர்செய்யப்பட்ட பரப்பளவு விரிவடைந்தமையே பெருமளவு காரணமாகும். 1986 இல் இரண்டு பருவகாலங்களிலும் இப்பயிர்களின் கீழான பரப்பளவு ஏறக்குறைய 16,300 எக்டேயர்களுக்கு 37 சதவீதத்தினால் அதிகரித்தது. இதில் ஏறத்தாழ 75 சதவீதம் 1986 இன் சிறுபோகத்தில் மகாவலியின் 'எச்' பிரதேசத்தில் காணப்பட்டது.

1985/86 பெரும்போகத்தில் சோயா அவரை உற்பத்தி கணிசமாக அதிகரித்தது. எள்ளு, சின்னவெங்காயம், மிளகாய், கடலை என்பனவற்றின் உற்பத்தியில் கணிசமான அதிகரிப்புக்கள் பதிவுசெய்யப்பட்டன. சோளம், மரவள்ளி என்பன பயிரிடப்பட்ட பரப்பளவு வீழ்ச்சியடைந்தபோதும் சாதகமான வானிலை நிலைமைகளினால் அவற்றின் உற்பத்தி குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. உழுந்து, வத்தாளைக்கிழங்கு என்பனவற்றின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது.

மழைவீழ்ச்சி குறைவாக இருந்தபோதும் சின்னவெங்காயம், தட்டைப்பயறு, பயறு, சோயா அவரை, உழுந்து, கடலை என்பனவற்றின் உற்பத்தி சிறுபோகத்தில் அதிகரிப்புக்களையே பதிவுசெய்தன. மகாவலிச் செயற்றிட்டத்தின் கீழ் நீர்ப்பாசன வசதிகள் கிடைக்கத்தக்கதாக இருந்தமையின் காரணமாக பயிர்ச்செய்கை விரிவடைந்தமையே இம்முன்னேற்றத்திற்கு உதவிய முக்கிய காரணியாகும். மிளகாய் பயிரிடப்பட்ட பரப்பளவில் ஏறத்தாழ 15 சதவீதமான அதிகரிப்புக்காணப்பட்டபோதும் சிறுபோகத்தில் அதன் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டமைக்கு இப்பருவத்தின் இறுதிப்பகுதியில் காணப்பட்ட வரண்ட வானிலை நிலைமைகளே கரணமாக அமைந்தது. சோளம், உருளைக்கிழங்கு என்பனவற்றின் உற்பத்தி குறைவடைந்தமைக்கு பயிர்ச்செய்கைப்பரப்பளவு முறையே ஏறத்தாழ 55 சதவீதத்தினாலும் 15 சதவீதத்தினாலும் குறைவடைந்தமையே காரணமாகும். எள்ளின் உற்பத்தி சிறிதளவால் உயர்வடைந்தது.

1986 இல் சிறு உணவுப்பயிர்த்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 21,300 மெற்றிக் தொன்களுக்கு 27 சதவீதத்தினுல் உயர்வடைந்தன. முன்னைய ஆண்டில் எதிர்நோக்கப்பட்ட முக்கிய பிரச்சனையான விதைகளின் பற்றுக்குறை 1986 இல் காணப்படவில்லை. நிலப்பயன்பாட்டினை முன்னேற்றுவதனையும், உற்பத்தியை உயர்த்துவதனையும் நோக்கமாகக் கொண்டு வேளாண்மை அபிவிருந்தி மேலாண்மைச்சபை இழுபொறிகளைக் கழட்டிப்பூட்டுதலும் அதனை ஓட்டுதலும், தெளிப்பான்களைக் கழட்டிப்பூட்டுதல், நீர் இறைக்கும் பம்புகளைப் பேணுதலும் கழட்டிப் பூட்டுதலும், வேளாண்மைப் பொருட்களை வர்த்தகப்படுத்தல் என்பனவற்றில் பல பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை தொடங்கியது.

நெற் சந்தைப்படுத்தும்சபையினுல் தொழிற்படுத்தப்பட்ட எட்டுச்சிறு உணவுப் பயிர்களுக்கான கீழமட்ட விலைத் திட்டம்1986 இல் தொடர்ந்தும் நடைமுறையிலிருந்தது. இப்பயிர்களின் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும்பொருட்டு இவ்வாண்டில் விலைகள் உயர்த்தப்பட்டன. இதன்படி சோளம்,சோயா அவரை என்பனவற்றிற்குச் செலுத்தப்பட்ட விலை ஒவ்வொன்றும் ரூ. 1 இனுல் முறையே கிலோக்கிறும் ஒன்று ரூ. 4 இற்கும் ரூ. 7 இற்கும் உயர்த்தப்பட்டது. கடலைக்கு செலுத்தப்பட்ட விலை 25 சதவீதத்தினுல் கிலோக்கிறும் ஒன்று ரூ. 6.25 இற்கு சிறிதளவால் உயர்த்தப்பட்டது. குரக்கனுக்கு முன்னர் செலுத்தப்பட்ட கிலோக்கிறும் ஒன்றுக்கான ரூ. 2.75 உடன் ஒப்பிடுகையில் கிலோக்கிறும் ஒன்றுக்கு ரூ. 4.50 ஆக ஓரளவு உயர்ந்த விலையைப் பெற்றது. பயறிற்கும், தட்டைப்பயறிற்கும் செலுத்தப்பட்ட விலை முறையே ரூ. 3 இனுலும் ரூ. 2.50 இனுலும் கிலோக்கிறும் ஒன்று ரூ. 8.50 இற்கும் ரூ. 10.00 இற்கும் அதிகரிக்கப்பட்டன. எள்ளு, மிளகாய் என்பனவற்றிற்காக இருபடி விலைகளைக்கொண்டதொருமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. முன்னர் கிலோக்கிறுமிற்கு செலுத்தப்பட்ட ஒரே வீதமான ரூ. 6.00 உடன் ஒப்பிடுகையில் கறுப்பு எள்ளு கிலோக்கிறுமிற்கு ரூ. 7.00 இனை விலையாகப்பெற்றவிடத்து வெள்ளை எள்ளிற்கு கிலோக்கிறுமிற்கு ரூ. 8.00 செலுத்தப்பட்டது, முன்னர் செலுத்தப்பட்ட கிலோக்கிறும் ஒன்றிற்கான ரூ. 21 கொண்ட ஒரே விலையுடன் ஒப்பிடுகையில் செத்தல் மிளகாய்க்கான கீழ் மட்ட தரத்தைப் பொறுத்து கிலோக்கிறும் ரூ. 26.00 இற்கும், ரூ. 28.00 இற்கும் உயர்த்தப்பட்டது.

கீழ்மட்ட விலைத்திட்டத்தின்கீழ் 1986 இல் நெற்சந்தைப்படுத்தும்சபையினுல் கொள்வனவு செய்யப்பட்ட சோளத்தின் அளவு முன்னைய ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட அளவினைவிட மும்மடங்கு கூடுதலாக இருந்தது. சோயா அவரையின் கொள்வனவுகளும் 1985 இன் 20 மெற்றிக் தொன்களிலிருந்து 1986 இல் 424 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்து மிகக்கூடியளவு அதிகரிப்பினைக்காட்டின. அளவில் குறைவாக இருப்பினும் நிலக்கடலை, தட்டைப்பயறு, மிளகாய் என்பனவும் நெற் சந்தைப்படுத்தும்சபையினுல் கொள்வனவு செய்யப்பட்டன.

பல்வேறுபட்ட தூண்டுதல்கள் வழங்கப்பட்டபோதும் சிறு உணவுப்பயிர்த் துறையின் செயலாற்றம் எதிர்பார்ப்புகளுக்குக்கீழே இருந்தமைக்கு அதன் அபிவிருத்தியை தடைப்படுத்திய குறிப்பிட்ட தடைகளே காரணமாகும். துணை உணவுப்பயிர்கள் முக்கியமாக சிறுபோகத்திலேயே பயிர் செய்ப்படுவதன் காரணமாக பயிரிடப்படுகின்ற பரப்பளவு பெரும்போக நெல் அறுவடையின் வெற்றி அல்லது தோல்வியிலேயே பெருமளவிற்குத் தங்கியிருந்தது. பெரும்போக அறுவடை குறைவாக இருக்குமாயின் பெரும்போகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினை ஈடு செய்யும் பொருட்டு சிறுபோகத்தில் நெற்செய்கையின் மீதே மிகக்கூடியளவு கவனம் செலுத்தப்படும். இதனுல் அதிகளவு உறுதியற்றநிரம்பல் சந்தைப்படுத்

தலை இடர்மிக்கதாக்கி பெருமளவு விலைத்தளம்பல்களுக்கு வழிவகுக்கும். இதனைத் தொடர்ந்து இவ்வாண்டில் சில குறிப்பிட்ட பயிர்களுக்கான குறைவடைந்த விலைகள் அடுத்த ஆண்டின் உற்பத்தியைக் குறைப்பதற்குத் தூண்டுமாதலால் திட்டமிடப்பட்ட உற்பத்தியை மேற்கொள்வதனை இது கடினமாக்கும்.

**மீனும் கால்நடையும்**

வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் கட்டுப்படுத்தப்பட்ட மீன்பிடி நடவடிக் கைகளே காணப்பட்டபோதும், மீன்பிடித் துறையின் திருந்திய செயலாற்றம் வடமேற்கு, வடகிழக்குப்பிரதேசங்களிலிருந்து குடிபெயர்ந்த மீன்பிடிப்படகுகளின் இடப்பெயர்வைத் தொடர்ந்து மேற்கு, தெற்கு கரையோரப்பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகள் செறிவுற்றமையில் பிரதிபலிக்கப்பட்டது. இது நாட்டின் மீன் பிடிக் கைத்தொழிலில் நன்னீர் மீன்பிடியின் முக்கியத்துவம் வளர்ந்து வருவதை யும் பிரதிபலிப்பதாகவுள்ளது.

வேறுபட்ட உதவுதொகைத் திட்டங்களின் கீழ் கடல்நீர், நன்னீர் மீன் பிடித்துறைகள் இரண்டிற்கும் வழங்கப்பட்ட உதவுதொகைளின் மொத்தத் தொகை முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட ரூ. 140 இலட்சத்துடன் ஒப்பிடுகை யில் ரூ. 250 இலட்சமாக விளங்கியது. இவ்வாண்டில் வேறுபட்ட உதவுதொகைத் திட்டங்களின்கீழ் மீன்பிடித்துறைக்கு 464 படகுகளும், 873 பொறிகளும் வழங் கப்பட்டன. அதேவேளை வெளிநாட்டு நிதி மூலங்களினால் நிதியிடப்பட்ட பலமீன் பிடி அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல்கள் 1986 இலும் தொடர்ந்து நடைபெற்றன. இவை வடமேற்குக் கரையோர மீன்பிடி அபிவிருத்தி செயற்றிட்டம், கிழக்குக் கரையோர மீன்பிடிச் செயற்றிட்டம், மேற்குக்கரை யோர மீன்பிடிச் செயற்றிட்டம், இலங்கை நீர்வாழ் மீன் வளர்ப்புச் செயற்றிட்டம் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன. கரையோர மீன்பிடிச் செயற்றிட்டங்கள் மீன்பிடிக்கலங்கள், படகுகள் போன்றவற்றின் நிருமாணத்தில் ஈடுபட்டிருந்தவேளை யில் நீர்வாழ் மீன்வளர்ப்புச் செயற்றிட்டம் உள்நாட்டு நன்னீர் மீன்பிடியின் அபிவிருத்தியில் ஈடுபட்டிருந்தது.

பொதுவான நியதிகளில் மீன்பிடித்துறையின் செயலாற்றம் எதிர்பார்ப் புக்களுக்குக் கீழேயே இருப்பதுடன் வெளியீடு உள்நாட்டு நுகர்வுத்தேவைகளை ஈடுசெய்வதற்குத்தேவையான அளவினைவிட குறிப்பிடத்தக்களவிற்குக் குறை வாகவே இருந்துவருகின்றது. அதிகரிக்கின்ற கேள்வியின் போது பற்றுக்குறை யான வழங்கல் காணப்பட்டமை கடந்த சில ஆண்டுகளாக அனைத்துவகை மீன்களின் விலைகளிலும் அதிகரிப்பினை விளைவித்தது. 1986 இல் பெரும்பாலான சிறந்தவகை மீன்களின் விலைகள் முன்னைய ஆண்டின் விலைகளினைவிட 10 சத வீதத்திற்கும் கூடுதலாக உயர்வடைந்தன. எனினும் இவ்வாண்டில் உற்பத்தி யாளர் நுகர்வோர் விலைகளுக்கிடையிலான வேறுபாடு மிகவும் மிதமாக இருந் தமை உற்பத்தியாளர்களுக்கு மிகச்சிறந்த விலையை உறுதிப்படுத்தும் பலமான போட்டியை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. இதேவேளை உயர்ந்த எரிபொ ருள் செலவு உற்பத்தியில் பெருந்தொகையை நிரம்பல் செய்யும் கடல் மீன் பிடியின் உயர்ந்த உற்பத்திச் செலவிற்குப் பங்களித்த முக்கிய உதவு காரணியாக விளங்கியது. எனவே மீன்பிடி அபிவிருத்திக் கொள்கை நீர்வாழ் மீன் வளர்ப்பு போன்ற மீன் உற்பத்தியில் குறைந்த வலு நுகர்வினைக்கொண்ட முறை களில் கவனத்தைச் செலுத்தவேண்டும். ஆகவே ஏறத்தாழ 300,000 ஏக்கர் நீர்ப் பரப்பினை நீர்நிலைகள் கொண்டிருக்கும் நியதிகளில் அபிவிருத்திக்கான உள்ளார்ந்த வளத்தினைக் கொண்டிருக்கும் உள்நாட்டு நன்னீர் மீன்பிடித்துறையின் அபி விருத்தியில் ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். இதுதொடர்

பாக இத்துறையின் அபிவிருத்திக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து எதிர் பார்க்கப்பட்ட ரூ 5,400 இலட்சம் கொண்ட கடனை அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஆராய்ச்சி, பயிற்சி, விரிவாக்கம், பதனிடலும் சந்தைப்படுத்தலும் என்பனவற் றில் முதலீடு செய்வது மிக இன்றியமையாததாகும்.

மீன்பிடித்துறையை உயர்த்துவதற்காக குறிப்பிடத்தக்க முதலீடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளபோதும், கரைகடந்த மீன்பிடி (கரையிலிருந்து 25-60 மைல் கள்) ஆழ்கடல் மீன்பிடி, (கரையிலிருந்து 60 மைல்களுக்கு அப்பால்) என்பன வற்றின் அபிவிருத்திக்காக இதுவரை செலுத்தப்பட்ட கவனம் வரையறைக்குட் பட்ட தொன்ருகவே தோன்றுகின்றது. உற்பத்தியை விரிவாக்குவதற்கு இத் துறையில் பயன்படுத்தத்தக்க உள்ளார்ந்த வளத்தைப் பொறுத்தவரை குறிப் பிடத்தக்க வாய்ப்பு காணப்பட்டபோதும் கடந்த பத்து ஆண்டுகளாக இத் துறைகளின் நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்தன. பெருமளவு முதலீடுகளின் தேவை, முன்னேற்றமடைந்த தொழில்நுட்பம் தொடர்புபட்டுள்ளமை என்பன வற்றைக் கருத்திற் கொள்கையில் இத்துறையின் ஆக்க முயற்சிகளில் தனியார் துறை பங்குபற்றுதல் குறைவானதாகும். எனவே மிகக் கூடியளவில் பயன்படுத் தப்படாதிருக்கும் இத்துறையின் உள்ளார்ந்தவளத்தினை பொருத்தமான ஊக்கு விப்புக்கள் மூலம் அல்லது இணைந்த முயற்சிகளில் வெளிநாட்டு கூட்டுக்களின் மூலமாகவோ பெற்றுக்கொள்வது விரும்பத்தக்கதாகும்.

குடித்தொகைப் புள்ளிவிபரவியல் திணைக்களம் 1986 இல் பால் உற்பத்தி (எருமைப்பால் உட்பட) 1780 இலட்சம் இலிற்றர்கள்* என தற்காலிகமாக மதிப் பிட்டுள்ளது. இது 1985 இன் உற்பத்தியினை விட 2 சதவீதம் குறைவானதாகும். இவ்வாண்டில் பண்ணைத்துறையின் மிகக்குறிபிடத்தக்க அபிவிருத்தி யாதெனில் தேசிய பாற்சபை தனியார்மயப்படுத்தப்பட்டமையேயாகும். புதிதாக நிறுவப் பட்ட தனியார் கூட்டு நிலையமான வரயறுக்கப்பட்ட இலங்கை பால் கைத்தொழில் கூட்டுநிலையம் (மில்கோ) 1986 ஒகத்து 1ஆம் நாளிலிருந்தும் தேசிய பாற் சபையின் தொழிற்பாடுகளைப் பொறுப்பேற்றுக்கொண்டது. இது தொடங்கப் பட்டதிலிருந்து மில்கோ 282 இலட்சம் இலிற்றர் பாலை சேகரித்ததுடன் 1986 இன் மொத்தச் சேகரிப்பு 672 இலட்சம் இலிற்றர்களாகியது. இது முன்னைய ஆண்டின் சேகரிப்பிற்கு பெரும்பாலும் சமனானதாகும். வடக்கு, வடமத்தி, கிழக்கு மாகாணங்களின் பால் சேகரிப்புக்களைப் பாதித்த உள்நாட்டுக்குழப்பங்கள், தெங்கு முக்கோணப் பிரதேசத்தில் நிலவிய வரட்சி நிலைமைகள் என்பன 1986 இல் இத்துறையின் வளர்ச்சியைத் தடைசெய்தன.

இவ்வாண்டில் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள விலங்கு உற்பத்தி நலத்திணைக்களம் மற்றும் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை என்பன இனப்பெருக்கப்பணிகளின் ஏற்பாடு, தொற்று நோய்களுக்கு எதிரான தடுப்பு மருந்து, மேய்ச்சல் நில அபிவிருத்தி, விலங்கு வளர்ப்பிலுள்ள ஆளணியினருக்குப்பயிற்சி போன்ற அவர்களின் உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றன. அத்துடன் கால்நடைத் துறையின் வெளியீட்டினை உயர்த்துவதனை நோக்கமாகக் கொண்ட வெளிநாட்டு உதவிகள் மூலமாகவும் அதுபோன்று உள்நாட்டு நிதியின் மூலமாகவும் நிதியிடப்பட்ட பல சிறப்புச்

---

*மதிப்பீடுகளுடன் தொடர்புள்ள சில பிழைகளைத் தவிர்க்கும் பொருட்டு 1984ஆம் ஆண்டுகளிலிருந்து இத்தரவுத் தொடர்கள் திருத்தியமைக்கப்பட்டன.

செயற்றிட்டங்கள் 1986 இலும் தொடர்ந்து நடைபெற்றன. இவை இலங்கை சுவிச்சர்லாந்து கால்நடை அபிவிருத்திச் செயற்றிட்டம், இலங்கை சேர்மன் ஆடு அபிவிருத்திச் செயற்றிட்டம் அநுராதபுரம், வரண்டவலய வேளாண்மைச் செயற்றிட்டம்,குருநாகல் மாவட்ட விலங்கு வளர்ப்பு அபிவிருத்திச்செயற்றிட்டம் இலங்கை ஆசிய அபிவிருத்தி வங்கி கால்நடை அபிவிருத்திச் செயற்றிட்டம், சிடா கோழிவளர்ப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம், குறிப்பாக விலங்கு வளர்ப்பு அபிவிருத்தியை வலியுறுத்தும் மாவட்ட மட்டத்திலான பல ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

1982 இல் தொழிற்பாட்டைத் தொடங்கிய இலங்கை-நெதர்லாந்து கால் நடை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் இவ்வாண்டில் முற்றுப்பெற்றது. எனினும் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதிக்கட்டத்தில் அதன் ஒரு பகுதியாக நெதர்லாந்தின் உதவியுடன் அமைக்கப்பட்ட சிறு உடமையாளர் பாற்பண்ணை அபிவிருத்திச் செயற்றிட்டம் அதன் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தது. இம்முயற்சிகள் எல்லாம் எடுக்கப்பட்டிருந்துங்கூட, விலங்குவளர்ப்புத் துறையின் செயலாற்றம் பலகாரணிகளினுல் பாதிக்கப்பட்டு 1986 இல் பின்னடைந்தது. தெங்கு உற்பத்திகளின் தாழ்ந்த விலைகளின் விளைவாகத்தோன்றிய தேசிய கால்நடை அபிவிருத்திச்சபையின் வருமான வீழ்ச்சி பல்வேறு செயற்றிட்டங்களின் மீதான மூலதன செலவினத்தைக் குறைத்தது. உலர்வலய பிரதேசங்களில் அமைந்துள்ள பண்ணைகள் மீதான மூலதனச் செலவினம் உள்நாட்டுக்குழப்பங்களினுல் இடைநிறுத்தப்பட்டது.

குடிமதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களம் 1986 இல் முட்டை உற்பத்தி 6,670 இலட்சம் எனத் தற்காலிகமாக மதிப்பிட்டுள்ளது. இது முன்னைய ஆண்டினைவிட 8 சத வீதங்கொண்டதொரு அதிகரிப்பாகும்.

#### கிராமியக் கொடுகடன்

1986 இல் கிராமியக் கொடுகடன் துறையில் பல முக்கிய புதிய வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஐந்தாவது பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி அம்பாந்தோட்டை மாவட்டத்தில் திறக்கப்பட்டது. 1986 சிறுபோகத்திலிருந்து புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் குறுங்கால வேளாண்மைக் கொடுகடன் பகிர்ந்தளிப்பில் குறிப்பிடத்தக்க ஓர் முன்னேற்றம் காணப்பட்டது. மேலும், இலங்கை எண்ணெய்க் கொழுப்புக் கூட்டுத்தாபனத்தினுல் சோயா அவரை, சோளம் என்பன கொள்வனவு செய்யப்படுவதற்கான சந்தைப்படுத்தல் கடன் திட்டம் 1986 இல் நடைமுறைக்கு வந்தது.

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தினூடாக அறிமுகப்படுத்தப்பட்ட பல புதிய பண்புகள் குறுங்கால வேளாண்மைக் கொடுகடன் பகிர்ந்தளிப்பின்மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருந்தன. இது இத் திட்டத்தின்கீழ் வங்கிகளால் ஒப்புதலளிக்கப்பட்ட ரூ. 1,510 இலட்சம் தொகை கொண்ட பயிர்ச்செய்கைக் கடன்களில் பிரதிபலிக்கப்பட்டதுடன் சிறுபோகத்திற்காக முன்னெப்பொழுதும் ஒப்புதலளிக்கப்படாத மிக உயர்ந்த தொகையாகவும் இருந்தது. ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தத் தொகையில் ரூ. 1,380 இலட்சங்களை வங்கிகள் வழங்கின. 3 ஆண்டுகள் அல்லது 6 தொடர்ச்சியான பயிர்ச்செய்கைப் பருவகாலங்களைக் கொண்ட காலப்பகுதிக்

கான தொடர்க்கொடுகடனுக்கு ஒப்புதலளிப்பதற்கான ஒழுங்குகள் வேளாண்மை யாளர்களினுல் நன்கு வரவேற்கப்பட்டன. கொடுகடன் தொடரின் கீழான ஆகக்கூடிய எல்லை, 3 ஆண்டுக் காலத்தில் பயிர்ச்செய்கைத் தன்மையைப் பரிசீலனை செய்தபின்னர் கடன்பாட்டாளர்களுடன் ஆலோசனை செய்த பின்னரே வங்கிகளினுல் நிர்ணயிக்கப்படுகின்றன. எனவே புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழான கடன்கள் குறிப்பிட்ட பயிருக்குரிய கடனுக இருக்கவில்லை. கிடைக்கத்தக்கதாகவுள்ள தண்ணீர் விலைகள்,இலாபத் தன்மை என்பனவற்றைக் கருத்திற்கொண்டு வேளாண்மையாளர் அவர் விரும்பும் எத்தவொரு பயிரினையும் பயிரிடுவதற்கு அவருக்கு நெகிழ்ச்சித்தன்மை வழங்கப்பட்டது. அத்துடன் 6 பருவகாலங்களுக்கு ஒரு தடவை மாத்திரமே விண்ணப்பங்கள் நிரப்பப்படவேண்டியிருந்தமையினுல் இது கடன்பாட்டாளர்களினதும் அதுபோன்று வங்கியினதும் கொடுக்கல் வாங்கல் செலவினைக் குறைத்தது. இத் திட்டத்தின் தொழிற்பாட்டுச் செலவினை மேலும் குறைக்கும்பொருட்டு கடன் வழங்கலில் வங்கிகள் பிரதேச அணுகுமுறையைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. பரந்த பிரதேசம் முழுவதும் சிதறிக்காணப்பட்ட கடன்களுக்குப் பதிலாக வங்கிகள் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களில் செறிவான முறையில் அவற்றின் கடன்களை தற்பொழுது வழங்கியமை சிறந்த முடிவுப் பயன்பாட்டு மேற்பார்வைக்கும், மீள்பெறுகைகளுக்கும் உதவியது. நியாயமான காலப் பகுதியில் வங்கியுடன் சிறந்த நிதியியல் தொடர்புகளைக் கொண்டிருக்கும் வேளாண்மையாளர்களுக்கு உதவும் முகமாக இரு வேளாண்மையாளர்களுக்கிடையேயான உத்தரவாதங்களை வழங்குவது போன்ற பாதுகாப்பு ஒழுங்குகளை கைவிட்டு விடுமாறும் வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன.

1986 இல் மக்கள்வங்கி, இலங்கை வங்கி, அட்டன் நசனல் வங்கி, இந்தியன் ஓவசீஸ் வங்கி ஆகியவற்றுடன் புதிதாக நிறுவப்பட்ட பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் பயிர்ச்செய்கைக் கடன்களை வழங்கின. புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் வேளாண்மையாளர்களுக்கான பயிர்ச் செய்கைக் கடன்களுக்கான ஏற்பாடுகளில் சிக்கன, மற்றும் கூட்டுறவு கொடுகடன் சங்கங்கள் ஈடுபடுவதற்கும் வசதிசெய்தது. மத்திய வங்கியின் மீள் நிதியிடல் உதவியுடன் வங்கித் தொழில் முறையினுல் நிதியிடப்பட்ட கொடுகடன் திட்டத்தில் சிக்கன கூட்டுறவுக் கொடுகடன் சங்கங்கள் 1986 சிறுபோகத்திலேயே முதற் தடவையாக பங்கேற்றன. 1986 சிறுபோகத்தில் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்ட ஏற்பாடுகளின் கீழ் இரண்டு சங்கங்கள் மட்டுமே பதிவுசெய்யப்பட்டன. எதிர்காலத்தில் கூடுதலான சங்கங்கள் இத்திட்டத்தில் இணையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இத்திட்டத்தில் சிக்கன கூட்டுறவுக் கொடுகடன் சங்கங்களின் பங்கேற்பு பங்குடமை ஒழுங்குகளின் அடிப்படையில் பாதுகாக்கப்பட்டுள்ளது. பங்குடமை ஒழுங்குகளின்கீழ் தேவையான மூல தனத்தில் 25 சதவீதத்தினை சிக்கன கூட்டுறவுக் கொடுகடன் சங்கங்கள் வழங்கிய வேளைகளில் மூலவளத்தின் 75 சதவீதத்தினைக் கடன்வழங்கும் வங்கிகள் வழங்கின. எதிர்பாரா இழப்புக்கள் இதே விகிதாசாரத்தில் சிக்கன கூட்டுறவு கொடுகடன் சங்கங்களுக்கும் வங்கிகளுக்கிடையிலும் பங்கிடப்படும். மூலவள ஒதுக்கில் அதே போன்ற எதிர்பாரா இழப்புக்களை பங்கிடல் ஆகிய இரண்டிலும் சிக்கன கூட்டுறவுக்கொடுகடன் சங்கங்கள் பங்கெடுத்திருப்பதன் கரணமாக காடன்வழங்கல், பகிர்ந்தளித்தல், மீளப்பெறல் ஆகிய கட்டங்களில் பெருமளவிற்கு சீரிய முறை கடைப்பிடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சிறியளவு எண்ணிக்கையான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே மக்கள் வங்கியின் உதவியுடன் தொடர்ந்தும் தமது உறுப்பினர்களுக்கு பயிர்ச்செய்கைக் கடன்களை வழிப்

## புதிய அணைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின்கீழ்
(1986 திசெம்பர்

| காலப் பகுதி | மக்கள் வங்கி | | | இலங்கை வங்கி | | | அட்டன் நசனல் வங்கி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | மொத்தம் |
| பெரும் போகம் 1984/85 .. | 35.6 | 5.1 | 40.7 | 32.9 | 13.0 | 45.9 | 14.5 | 1.6 | 16.1 |
| சிறு போகம் 1985 | 19.1 | 5.8 | 24.9 | 14.2 | 8.8 | 23.0 | 5.1 | 3.2 | 8.3 |
| பயிர்ச்செய்கை ஆண்டு 1985 ... | 54.7 | 10.9 | 65.6 | 47.1 | 21.8 | 68.9 | 19.6 | 4.8 | 24.4 |
| பெரும் போகம் 1985/86 | 44.1 | 5.2 | 49.3 | 43.0 | 11.1 | 54.1 | 12.7 | 2.9 | 15.6 |
| சிறு போகம் 1986 | 51.4 | 23.0 | 74.4 | 31.0 | 13.6 | 44.6 | 5.2 | 11.9 | 17.1 |
| பயிர்ச்செய்கை ஆண்டு 1986(ஆ) | 95.5 | 28.2 | 123.7 | 74.0 | 24.7 | 98.7 | 17.9 | 14.8 | 32.7 |

*அட்டவணை 1.14*

**பயிர்செய்கைக்கு வழங்கப்பட்ட கொடுகடன்கள்**

***31 இல் உள்ளபடி)***

ப. இ. ரூபாய்களில்

| இந்தியன் ஓவசீஸ் வங்கி | | | பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | | | மொத்தக் கடன்கள் | | பு.அ.உ.கி.கொ.திட்டத்தின்கீழும் அ.உ.கி.கொ. திட்டத்தின் கீழும் வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள். |
|---|---|---|---|---|---|---|---|---|
| நெல் | சிறு உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | சிறு உணவுப் யயிர்கள் | |
| வி.கி. | வி.கி. | வி.கி. | — | — | — | 83.0 | 19.7 | 102.7 |
| வி.சி. | வி.கி. | வி.கி. | — | — | — | 38.4 | 17.8 | 56.2 |
| வி.கி. | வி.கி. | வி.கி. | — | — | — | 121.4 | 37.5 | 158.9 |
| — | — | — | — | — | — | 99.8 | 19.2 | 119.0 |
| 0.3 | — | 0.3 | 1.1 | — | 1.1 | 89.0 | 48.5 | 137.5(ஆ) |
| 0.3 | — | 0.3 | 1.1 | — | 1.1 | 188.8 | 67.7 | 256.5 |

(அ) வங்கிகளினால் வழங்கப்பட்ட தொகை.

(ஆ) தற்காலிகமானவை.

மூலங்கள்: மக்கள் வங்கி.
இலங்கை வங்கி.
அட்டன் நெசனல் வங்கி.
இந்தியன் ஓவசீஸ் வங்கி.
பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்.

படுத்தின. பெரும்பான்மையான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் முன்னைய தொகையைச் செலுத்தத் தவறியமையினால் மக்கள் வங்கியினால் தகைமையிழக்கச் செய்யப்பட்டன. தகைமை இழந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை மீண்டும் இத்தொழிற்பாட்டு முறையின்கீழ் கொண்டுவரும் பொருட்டு புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் பங்குடைமை அடிப்படையிலான அவற்றின் பங்களிப்பிற்குப் பாதுகாப்பினை வழங்கியது. மக்கள் வங்கி அத்தகைய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை எதிர்பாரா இழப்பில் 40 சத வீதம் வரையான பங்கினை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டது. 1986 சிறுபோகத்தில் புதிய ஒழுங்குமுறைகளின் அடிப்படையிலான திட்டத்தில் எந்தவொரு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களும் பங்கேற்கவில்லை.

1986 சிறுபோகத்தில் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் தொழிற்பாட்டிலிருந்த திட்டமாகிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்திற்குப் பொருந்தத்தக்க நியதிகள், நிபந்தனைகளின்கீழேயே 1985/86 பெரும்போகத்திற்கான பயிர்ச் செய்கைக் கடன்கள் வழங்கப்பட்டன. அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் என்பவற்றின்கீழ் இரண்டு அரச வங்கிகளினாலும், அட்டன் நெசனல் வங்கி, இந்தியன் ஓவசீஸ் வங்கி, பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி என்பனவற்றினாலும் வழங்கப்பட்ட கடன்கள் 1986 பயிர்ச் செய்கை ஆண்டில் ரூ. 2,570 இலட்சமாக விளங்கி, முன்னைய பயிர்ச்செய்கை ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களுடன் ஒப்பிடுகையில் 61 சதவீதமான அதிகரிப்பினைக் கொண்டிருந்தமையை அட்டவணை 1.14 எடுத்துக்காட்டுகின்றது. இவ்வதிகரிப்பு நாட்டில் சிறு வேளாண்மையாளர்களுக்கு கூடியளவு கடன் வழங்கும் மனப்போக்கினை இரண்டு அரச வங்கிகளும் கொண்டிருந்தமையை பிரதிபலித்ததுடன், கொடுகடன் திட்டத்தைக் தொழிற்படுத்துவதில் கூடியளவுக்கு நெகிழ்ச்சித்தன்மையையும் குறைந்தளவிலான செலவினத்தையும் உருவாக்கு முகமாக கொடுகடன் திட்டத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட பரந்தளவிலான திருத்தங்கள், இத்திட்டத்தின்கீழ், 50 சதவீதம் வரையான இழப்புக்களை ஈடுசெய்யும் விதத்தில் கொடுகடன் உத்தரவாதத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை என்பனவற்றின் செல்வாக்கைப் பெருமளவிற்கு பிரதிபலித்தது.

கடன் வழங்கலில் ஏற்பட்ட அதிகரிப்பில் மூன்று முக்கிய வங்கிகளும் பங்கு கொண்டிருந்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடன் வழங்கலில் ஏற்பட்ட 88 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பு மக்கள் வங்கியினால் அறிவிக்கப்பட்ட வேளையில், இலங்கை வங்கியினாலும் அட்டன் நெசனல் வங்கியினாலும் அறிவிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் முறையே 43 சதவீதமாகவும் 34 சதவீதமாகவும் விளங்கின. உயர்ந்தளவான கடன் வழங்கலைப்போன்றே உயர்ந்த வீதமான அதிகரிப்பும் மக்கள் வங்கியினாலேயே பதிவுசெய்யப்பட்டது. 1985 பயிர்ச் செய்கை ஆண்டில் வழங்கப்பட்ட ரூ. 660 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1986 இல் மக்கள் வங்கி ரூ. 1,240 இலட்சம் கொண்ட பயிர்ச்செய்கைக் கடனை வழங்கியது.

1986 பயிர்ச்செய்கை ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தப் பயிர்ச்செய்கைக் கடன்களில் 48 சதவீதம் மக்கள் வங்கியினுல் வழங்கப்பட்ட வேளையில், இலங்கை வங்கி, அட்டன் நெசனல் வங்கி ஆகியவற்றின் தொடர்பான பங்குகள் முறையே 38 சதவீதமாகவும், 13 சதவீதமாகவும் இருந்தன. புதிய அனைத்தையும் உள்ள டக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் கடன் வழங்குவதற்கு வங்கிகள் அதிகரித்த முயற்சிகளை எடுத்தமையுடன் 1982 மத்திய வங்கியினுல் அறிமுகப் படுத்தப்பட்ட பயிர்ச்செய்கைக் கடன்களின் செலுத்தப்படவேண்டிய தொகைக் கான மக்கள் வங்கியின் மீள் அட்டவணைப்படுத்தல் திட்டமும் கடன் வழங்கும் அளவில் அதிகரிப்பு ஏற்படுவதற்கு உதவியது. இத்திட்டம் அது தொடங்கப்பட்ட 1982 இல் இலங்கை வங்கி மட்டுமே இதனை நடைமுறைப்படுத்துவதற்கு இணங் கியது. எனினும் 1986 ஆம் ஆண்டிலிருந்து மக்கள் வங்கியும் இத்திட்டத்தில் பங்கு கொண்டமை இயற்கை அழிவுகளின் காரணமாக தமது முன்னைய பயிர்ச் செய்கைக் கடன்களை செலுத்தத் தவறிய பல வேளாண்மையாளர்கள் புதிய கடன்களைப் பெறுவதனை இயலச்செய்தது.

1986 இல் நெற் செய்கைக்கான கடன்களின் மொத்தத் தொகை ரூ. 1,890 இலட்சமாக அல்லது மொத்தப் பயிர்ச்செய்கைக் கடன்களில் 74 சதவீதமாக இருந்தது. முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட தொகையுடன் ஒப்பிடு கையில் இது 56 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பினைக் காட்டியது. மக்கள் வங்கி முன்னைய ஆண்டின் 45 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 960 இலட்சத்தினை அல்லது நெற்கடன்களில் 51சதவீதத்தினை வழங்கியது. இலங்கை வங்கி முன்னைய ஆண்டினை போன்றே 1986 பயிர்ச்செய்கை ஆண்டிலும் நெற்கடனில் 39 சத வீதமான பங்கினைக் கொண்டிருந்தது. அட்டன் நசனல் வங்கியினுல் வழங்கப் பட்ட நெற்கடன்கள் ரூ. 17 இலட்சம் அல்லது 9 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது.

1985/86 பெரும்போகத்தில் நெற் செய்கைக்கான கடன்கள் ரூ. 1,000 இலட்சமாக விளங்கி இவ்வாண்டில் வழங்கப்பட்ட கடன்களில் அரைப்பங்கிற் கும் சிறிது கூடுதலாகக் காணப்பட்டவிடத்து முன்னைய ஆண்டின் அத்தகைய கடன்கள் மொத்தக் கடனில் மூன்றிலிரண்டு பங்காக இருந்தன. இதற்கு 1986 இன் சிறுபோகத்தில் வழங்கப்பட்ட பயிர்ச்செய்கைக் கடன்கள் 1985 இன் சிறு போகத்துடன் ஒப்பிடுகையில் 145 சதவீதம் கொண்ட மிகக் கூடியளவு அதி கரிப்பினைக் கொண்டிருந்தமையே முக்கிய காரணமாகும்.

மக்கள் வங்கி 1985/86 பெரும்போகத்தில் நெற்கடனின் 44 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில், இலங்கை வங்கியும் அட்டன நசனல் வங்கியும் முறையே 43 சதவீதத்திற்கும் 13 சதவீதத்திற்கும் வகைகூறின. மக்கள் வங்கியும் இலங்கை வங்கியும் முன்னைய ஆண்டின் பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் 1985/86 பெரும்போகத்தில் அவற்றின் நெற் கடன்களை அதிகரித்துக்கொண்டன. 1986 சிறுபோகத்தில் மக்கள் வங்கி வழங்கிய ரூ. 510 இலட்சம், முன்னைய சிறுபோகத் தில் வழங்கப்பட்ட நெற்கடனுடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ 169 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். 1986 சிறுபோகத்தில் நெற்செய்கைக்காக இலங்கை வங்கி வழங்கிய ரூ. 310 இலட்சம் முன்னைய சிறுபோகத்துடன் ஒப்பிடு கையில் 118 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.

1986 சிறுபோகத்தில் பயிர்ச்செய்கைக் கடன்களின் மொத்த எண்ணிக்கை 23,964 ஆக விளங்கியதுடன் இதில் 68 சதவீதம் நெற்பயிர்ச் செய்கைக்கான தாகவும், 27 சதவீதம் மிளகாய்ச் செய்கைக்குரியதாகவும், 5 சதவீதம் ஏனைய அனைத்துப் பயிர்ச்செய்கைக்குரியதாகவும் இருந்தது. 1986 சிறுபோகத்தில் கடன்களின் மொத்த எண்ணிக்கையில் 70 சதவீதம் குடியேற்றத்திட்ட மக்களுக் குச் சென்ற வேளையில் 21 சதவீதம் சொந்த நிலமுடையோருக்கும், 8 சதவீதம் வாரப்பயிர்ச் செய்கையாளர்களுக்கும் சென்றது. இதையொத்ததொரு தன்மை இத்திட்டத்தின்கீழ் நிதியிடப்பட்ட நிலப்பரப்பிலும் அவதானிக்கப்பட்டது. மொத்தப் பரப்பில் 71 சதவீதம் குடியேற்றத்திட்டங்களிலும், 20 சதவீதம் சொந்த நிலங்களிலும், 8 சதவீதம் வாரப்பயிர்ச் செய்கை நிலங்களிலும், 1 சதவீ தம் குத்தகை நிலங்களிலும் காணப்பட்டது. 1986 சிறுபோகத்தில் கொடுகடன் வழங்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு 52,458 ஏக்கர்களாகக் காணப்பட்டதுடன் இதில் 88 சதவீதம் முதன்மை நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் இருந்தன. சிறு நீர்ப்பாசனம் மற்றும் மழைநீரை நம்பிய பிரதேசங்களின் கீழுள்ள நிலப்பரப்பு முறையே 4 சதவீதமாகவும், 8 சதவீதமாகவும் இருந்தன.

1986 இன் பயிர்ச்செய்கை ஆண்டில் சிறு உணவுப்பயிர்ச் செய்கைக்கான கடன்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 80 சதவீதத்தினால் உயர்வடைந்தன. மக்கள் வங்கி, அட்டன் நசனல் வங்கி என்பனவற்றின் கடன் வழங்கல் பெரும் பாலும் மும்மடங்காகி முறையே ரூ. 280 இலட்சமாகவும் ரூ. 150 இலட்ச மாகவும் விளங்கின. இலங்கை வங்கியின் இது தொடர்பான அதிகரிப்பு 1985 இல் ரூ. 220 இலட்சத்திலிருந்து 1986 இல் ரூ. 250 இலட்சங்களுக்கு அதிகரித்தது,

1986 இல் வேளாண்மைக் கடன் வழங்கல் முன்னேற்றத்தைக் காட்டிய போதும் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடந்தகால பயிர்ச்செய்கைக் கடன்களின் மீளப்பெறல் 1986 இல் வீழ்ச்சியடைந்தது. 1986 இல் நெற்கடன்களின் மீளப்பெறல் 1985 இன் 82 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 75 சதவீதமாகக் காணப்பட்டது. எனினும், 1985/86 பெரும்போகத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த நெற் கடன்களில் 79 சதவீதம் 1986 இறுதியில் மீளப்பெறப்பட்டது. 1985 இறுதியில் பெறப்பட்ட 1984/85 பெரும்போக காலக் கடனுக்குரிய மீள்பெறுகை வீதமான 67 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் இதனை ஒரு திருப்திகரமான விடயமாகக் கருதலாம். 1986 பயிர்ச்செய்கையாண்டில் வழங்கப்பட்ட சிறு உணவுப் பயிர்களுக்கான கடன்களின் மீளப்பெறல் வீதம் முன்னைய பயிர்ச்செய்கை ஆண்டில் வழங்கப்பட்ட அத்தகைய கடன்களின் மீள்பெறுகை வீதமான 78 சதவீதத்துடன் ஒப்பிடுகை யில் 1986 இறுதியில் 60 சதவீதமாக இருந்தது. 1985 இன் சிறு உணவுப் பயிர்க் கடன் தொடர்பாக அவ்வாண்டின் இறுதியில் அடையப்பட்ட 60 சதவீதமான மீள் பெறுகை வீதத்துடன் ஒப்பிடுகையில் 1986 இன் மீள் பெறுகை வீதம் திருப்தி கரமானதாக காணப்பட்டது.

தற்போதுள்ள பயிர்ச்செய்கைக் கடன்களின் மீள் அட்டவணைப்படுத்தும் திட்டம் 1986 இல் மக்கள் வங்கி பங்கேற்றதன் காரணமாக திருப்திகரமான செயற்பாட்டினைக் காட்டியது. இவ்வாண்டில் மக்கள் வங்கி ரூ. 140 இலட்சம் தொகை கொண்ட 5,508 நேரடிக் கடன்களையும், கூட்டுறவு நிலையங்களுக் கூடாக வழங்கப்பட்ட ரூ. 230 இலட்சம் மொத்தத் தொகை கொண்ட 6,222 கடன்களையும் மீள அட்டவணைப்படுத்தியது 1986 சிறுபோகத்திலிருந்து புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் வங்கிகளுக்கு

மீண்டும் மீண்டும் கடன் பெறும் வசதிகள் வழங்கப்பட்டதுடன் மீள் அட்டவணைப் படுத்தப்பட்ட கடன்களையும் மத்திய வங்கி மீள் நிதியிட்டது. இவ்வசதியின்கீழ் இயற்கை அழிவுகளினால் பயிர் பாதிக்கப்பட்டமையின் காரணமாக செலுத்தத் தவறிய கடன்களையும் ஒன்றுசேர்ந்த வட்டியையும் 32 மாதங்களுக்கு மீள் அட்டவணைப்படுத்த முடியும். மத்திய வங்கி ஆண்டிற்கு 1.5 சதவீத வட்டியில் அதன் மீள் நிதியிடலை அத்தகைய கடன்களுக்கும் விரிவாக்கியது. மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படும் கடன் வசதியின்கீழ் மக்கள் வங்கி 1986 சிறுபோகத்தில் ரூ. 7 இலட்சம் கொண்ட 245 கடன்களை மீள அட்டவணைப்படுத்தியது. இலங்கை வங்கியின் இது தொடர்பான எண்தொகைகள் ரூ. 2 இலட்சம் கொண்ட 60 கடன்களாக இருந்தன. 1986 சிறுபோகத்திலிருந்து புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பயிர்ச் செய்கைக் கடன்களில் 50 சதவீதம் மத்திய வங்கியின் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின்கீழ் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது.

கிராமியத் துறைக்கு நடுத்தர, நீண்டகாலக் கொடுகடனை வழங்குவதற்காக 1986 இல் ஐந்து புதிய கொடுகடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. பண்ணை அபிவிருத்திக்கான கொடுகடன், ஆசிய அபிவிருத்தி வங்கியின் கால்நடை அபிவிருத்தி செயற்றிட்டம், நிலக்கீழ் நீர்ப்பாசனத்திற்காக குழாய்க்கிணறுகளை அமைப்பதற்கான கொடுகடன் திட்டம் என்பன புதிய கொடுகடன் திட்டங்களில் சிலவாகும். கிராமியத்துறை இளைஞர்களின் சுயதொழில் வேலை வாய்ப்புக்களை ஊக்குவிக்கும் பொருட்டு மேலும் இரு கொடுகடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. சுயதொழில் வேலை வாய்ப்புக்களை ஊக்குவித்தல் இவ்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய திட்டங்களின் பரந்தளவு அங்கீகாரத்தைப்பெற்றுள்ளது. சுயதொழில் வேலை வாய்ப்பினை ஊக்குவிப்பதற்கான கொடுகடன் திட்டங்கள் மாத்தளையிலுள்ள மத்திய வங்கியின் பிரதேச அலுவலகம், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் என்பனவற்றினூடாக நடைமுறைப்படுத்துவதற்கென்று சிறப்பான முறையில் வடிவமைக்கப்பட்டன.